# வானவில்

# VAANAVIL

இதழ் - 79, 80, 81

ஆடி – புரட்டாதி 2017

ISSUE – 79,80,81

JULY – SEPTEMBER 2017


# அமைச்சர்கள் பதவி விலகுவதால் மட்டும் ‘நல்லாட்சி’ தூய்மையாகிவிடாது!



இரண்டரை வருடங்களுக்கு முன்னர் 2015 ஜனவரி 08இல் தற்போதைய மைத்திரி – ரணில் அரசாங்கம் பதவி ஏற்றபோது நாட்டு மக்களுக்கு ‘நல்லாட்சி’ வழங்கப்போவதாகச் சொல்லியே பதவி ஏற்றது.

குறிப்பாக, முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இடம் பெற்ற ஊழல், மோசடிகள், அதிகாரத் துஸ்பிரயோகம் எதுவும் தமது ஆட்சியில் இருக்காது என மைத்திரியும், ரணிலும் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தனர்

அத்துடன், சிறுபான்மை தேசிய இனங்களின் – குறிப்பாகத் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதன் காரணமாக தமிழ் மக்களின் பிரதான அரசியல் அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை எதுவும் இன்றி ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கும், நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ஆதரவளித்திருந்தது.

அதேபோல, முஸ்லீம் கட்சிகளும் நிபந்தனை எதுவும் இன்றி மைத்திரி – ரணில் அணிக்கு ஆதரவளித்திருந்தன. எனவே, கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ், முஸ்லீம் மக்களின் வாக்குகள் கிடைத்திருக்காவிடின், மைத்திரியோ ரணிலோ ஒருபோதும் பதவிக்கு வந்திருக்க முடியாது என்பது சிறுபிள்ளைக்குக்கூடத் தெரியும்.

இவை தவிர, யுத்தக் குற்றங்கள் சம்பந்தமாக அமெரிக்கா தலைமையிலான நாடுகள் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பித்து நிலைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முழுமையாக நிறைவேற்றப்படும் எனவும் மைத்திரி – ரணில் அரசு வாக்குறுதி அளித்தது.

ஊடக சுதந்திரமும், மனித உரிமைகளும் பேணப்படும் எனவும் மைத்திரி – ரணில் அரசு வாக்குறுதி அளித்தது. ஆனால் இவற்றில் ஒன்றைக்கூட இந்த அரசாங்கம்


**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**


நூறு சிந்தனை மலரட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணை என்ற அரசியல்

பிரேசில், ஆர்ஜன்ரீனா, கொலம்பியா, சிலி, பெரு, சூரினாம் ஆகிய தென் அமெரிக்க நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராகப் பணி பரிந்த இலங்கை முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரியாவிற்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடைபெற்றால், அவருக்கு எதிராக சாட்சியங்களை வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாக, இலங்கையின் இன்னுமொரு முன்னாள் இராணுவ தளபதியும் தற்போதைய அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இதற்கு முன்னதாக இலங்கைத் தூதுவர் பணியிலிருந்து கடந்த ஓகஸ்ட் 31ந் திகதி ஓய்வுபெற்ற ஜகத் ஜயசூரியா மீது, பிரேசில் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் சில மனித உரிமை குழுக்கள் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக செய்திகள் வெளிவந்தன. சரத் பொன்சேகா இராணுவத்தளபதியாக பதவி வகித்த இறுதி யுத்தத்தின்போது, வவுனியா கட்டளைத்தளபதியாக ஜகத் ஜயசூரியா பணி புரிந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடர்பில் 'போர்க்குற்றம்' என்ற பதம், 2009 ஆம் ஆண்டு புலிகளுக்கும் இலங்கை அரசபடைகளுக்கும் நடந்த இறுதியுத்தத்தில் இலங்கை அரசபடைகள் மாத்திரம் இழைத்த குற்றங்கள் என்ற அர்த்தத்திலேயே பொதுவாக மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதனை சரத் பொன்சேகாவும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார். ஆனால் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழு அறிக்கையில், இலங்கை அரச படைகளும் புலிகளும் போர்க்குற்றங்களை இழைத்துள்ளதாகவே கூறப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் 'போர்க்குற்ற விசாரணை' என்பது, உலகளாவிய ரீதியில் போர்க்குற்றங்களை தொடர்ச்சியாகச் செய்து கொண்டிருக்கும் நாடுகளாலாலேயே ஐ.நா. வாயிலாக முன்னெடுக்கப்பட்டும் கொண்டிருக்கின்றது.

புலிகளைத் தோற்கடித்த இறுதியுத்த காலப்பகுதியில் இலங்கையின் இராணுவத்தளபதியாக இருந்தவர் சரத் பொன்சேகா, உதவிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் தற்போதைய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா. இவர்கள் இருவருமே தற்போது இலங்கையில் போர்க்குற்ற விசாரணையொன்று நடைபெற வேண்டுமென்ற தரப்பினரது முழு ஆதரவாளர்களாக உள்ளனர். இப்போது இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி ஒருபடி முன்னேபோய், கொழும்பிலுள்ள ஊடகங்களுக்கு இலங்கை அரசபடைகளுக்கு எதிராக சாட்சியம் வழங்கவும் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். ஆனால் இதே சரத் பொன்சேகா, புலிகளை போரில் வெற்றி கொண்டதற்கு காரணமாகவிருந்தது அப்போதிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அல்ல, இராணுவத்தளபதியாகவிருந்த தானே என மார்தட்டி, 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவிற்கு எதிராகப் போட்டியிட்டு தோல்வி கண்டவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தவர், 2015 ஆம் ஆண்டுத்தேர்தலில் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு எதிராகப் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டு, தேர்தலில் வெற்றி பெற்றதிலிருந்து, இலங்கை அரசியலில் '180 பாகை பல்டிகள்' பல நடந்த வண்ணமுள்ளன. அந்த வகையாகவே சரத் பொன்சேகாவின் கூற்றையும் பார்க்க வேண்டும். அத்துடன் மைத்திரிபால சிறிசேனா, சரத் பொன்சேகா போன்ற அரசாட்சிக்கு விசுவாசமற்றவர்களைக் கொண்டிருந்த அரசினாலேயே, ஒருபோதுமே தோற்கடிக்கப்பட முடியாதென்று வர்ணிக்கப்பட்ட புலிகள் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பது இலங்கை வரலாற்றில் ஆச்சரியமளிக்கக் கூடியதொரு விடயமாக எப்போதுமே பேசப்படப் போகின்றது.

யுத்தம் முடிவடைந்து 8 வருடங்களின் பின்னர் இராணுவத்தளபதி தனக்குக் கீழிருந்த கட்டளைத்தளபதிக்கு எதிராக போர்க்குற்ற விசாரணையில் சாட்சி சொல்ல முன்வந்திருப்பதானது, போர்குற்ற விசாரணையை வலியுறுத்தும் தமிழர் தரப்பினருக்கு சாதகமான செய்தியாக அமைந்துள்ளது. அதேவேளை யாழ்ப்பாணக் குடாநாட்டினை இலங்கை இராணுவம் முழுமையாகக் கைப்பற்றிய பின்னர் 1995-1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடாநாட்டில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன 600 பேர்கள் தொடர்பாக சரத் பொன்சேகா நேரடியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறார். இதனால் இலங்கையில் போர்க்குற்ற விசாரணை நடைபெற வேண்டுமென தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரும் அந்நிய சக்திகளிடம் நல்ல பெயர் வாங்கி, போர்க்குற்றத் தண்டனையிலிருந்து தப்புவதற்காக அவர் இவ்வாறு கூறினாரோ தெரியாது என்ற சந்தேகம் எழுவதும் தவிர்க்க முடியாதது.

இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தகாலப்பகுதி முழுவதிலும் அத்துடன் அரசைக்கவிழ்ப்பதற்காக ஜே.வி.பி கிளர்ச்சி செய்த காலப்பகுதிகளிலும் போர்க்குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதனை யாராலும் மறுப்பதற்கில்லை. அந்நிய அழுத்தங்களின்றி, இலங்கையில் நீதியான போர்க்குற்ற விசாரணையொன்று இடம்பெறுவதை இன, மத, அரசியல் பேதங்கடந்து எல்லா இலங்கையர்களும் வரவேற்க வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆனால் போர்க்குற்ற விசாரணை என்பது பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டுமென்ற ஒரேயொரு நோக்கத்திற்கு அப்பால், தத்தமது எதிரிகளைக் குறிபார்த்தே நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பொதுவாக புலிசார்பு தமிழ் தேசியவாதிகளும் தற்போதைய அரசும், முன்னைய அரசினை எப்படியாவது பழிவாங்க வேண்டும், மீண்டும் அதிகாரத்திற்கு வராமல் ஓரங்கட்ட வேண்டுமென்ற நிகழ்ச்சி நிரல்களின் கீழேயே வேலை செய்து வருகிறார்கள்.


**வானவில்**

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் எப்போதுதான்.....



அண்மையில் ஒரு வைபவத்தில் பேசிய போலி எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், தேவை ஏற்பட்டால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து தன்னும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தான் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

சம்பந்தனின் இந்தக் கூற்று அரசியல் நெளிவு சுழிவுகளை விளங்கிக் கொள்ளாத சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. அவர்களில் எல்லாம் தெரிந்தவர்களாகக் காட்டிக் கொண்டு ஊடகங்களில் அரசியல் பத்திகள் எழுதும் சிலரும் அடங்குவர். ஆனால் இந்தப் பிற்போக்குத் தமிழ் கட்சி தலைவர்களின், அதிலும் சம்பந்தனின் அரசியல் தில்லுமுல்லுகளையும், குள்ளத்தனங்களையும் புரிந்து கொண்டவர்களுக்கு சம்பந்தனின் இந்தப் பேச்சு ஆச்சரியம் எதனையும் அளித்திருக்காது.

ஏனெனில், இதே சம்பந்தனும் அவரது சகாக்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரும்தான், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும், தமிழ் மக்களினதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளினதும் அபிப்பிராயங்களைப் புறக்கணித்துவிட்டு, எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி மைத்திரி – ரணில் கூட்டை கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தவர்கள்.

அதுமாத்திரமின்றி, தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படமாட்டாது, ஒற்றையாட்சியே தொடரப்படும் என ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் பல தடவைகள் வலியுறுத்திச் சொன்ன போதிலும், அவர்கள் இருவரும் நிச்சயமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள் என திரும்பத் திரும்ப அடித்துச் சொன்னவர்களும் இந்தச் சம்பந்தனும் அவரது சகாக்களும்தான்.

அண்மையில் கூட, ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற அரசியல் பிரவேசத்தின் 40ஆவது ஆண்டுப் பூர்த்தி கொண்டாடப்பட்ட போது, சம்பந்தன் ரணிலின் ‘சேவையை’ வானளாவப் புகழ்ந்து தள்ளினார். நாடாளுமன்றத்தின் சம்பிரதாயபூர்வ எதிர்க்கட்சித் தலைவர் என்ற கோதாவில் மட்டுமின்றி, அதற்கு அப்பாலும் சென்று ரணில் நாட்டுக்கு ஆற்றிய ‘சேவை’களையும், அவரது தனிப்பட்ட திறமைகளையும் சம்பந்தன் புகழோபுகழ் என்று புகழ்ந்து தள்ளினார்.

## தோழர் மணியம்

அவரது புகழ்ச்சியின் முக்கியமான அம்சம் என்னவென்றால், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் தான் போட்டியிடப் போவதாக அடம் பிடிக்காமல் மகிந்தவின் சர்வாதிகார அரசைத் தோற்கடிப்பதற்காக மைத்திரியை பொது வேட்பாளராக ஏற்றுக் கொண்டார் என்பதுதான்.

இவ்வாறு கனவிலும் நினைவிலும் ஐக்கிய தேசிய கட்சியை ஆராதிக்கும் சம்பந்தன், மகிந்தவுடன் சேர்ந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போகிறேன் என்றால், அதை நம்புவதற்கு மக்கள் அவ்வளவு முட்டாள்கள் அல்ல என்பதே உண்மை. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலம் முழுவதும் இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு அழைத்த போதெல்லாம் தட்டிக்கழித்ததுடன், அரசை வசை பாடுவதிலேயே காலத்தைச் செலவழித்த சம்பந்தன் கோஸ்டி, இப்பொழுது மட்டும் மகிந்தவுடன் சேர்ந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போவதாகச் சொல்வது, இவர்களது வழமையான மக்களை ஏமாற்றும் புருடாக்களில் ஒன்று.

உண்மை என்னவென்றால், மைத்திரி – ரணில் அரசு தமிழ் மக்களின் இனப் பிரச்சினை சம்பந்தமாக உருப்படியான எதையும் செய்யாது என்பது சகலருக்கும் தெட்டத்தெளிவாகிவிட்ட நிலையில், அதைச் சமாளிப்பதற்காக ‘அவலை நினைத்து உரலை இடிப்பது’ போல, யாரையோ மிரட்டுவதற்காக மகிந்தவுடன் சேரப்போவது போன்று பாவ்லாக் காட்டுகிறார் சம்பந்தன்.

இது ஒருபுறமிருக்க, ஊழல் மோசடி காரணமாக முன்னர் நிதியமைச்சராகவும், பின்னர் வெளிவிவகார அமைச்சராகவும் இருந்து, எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நிலையில் நிர்ப்பந்தம் காரணமாக பதவி விலகிய ஐ.தே.கவின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான ரவி கருணநாயக்கவின் விடயத்திலும் சம்பந்தன் தனது வண்டவாளத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

சம்பந்தனின் கண்களுக்கு ரவி கருணநாயக்க ஊழல் மோசடிக்காரராகத் தெரியவில்லை. மாறாக குற்றச்சாட்டு எழுந்ததும் அவர் பதவி விலகியபடியால், முன்னுதாரண புருசராகத் தெரிகிறார். அப்படியானால் சம்பந்தனின் புகழ்ச்சியின்படி இனி எல்லோருக்கும் ரவி கருணநாயக்கதான் ஆதர்சபுருசர்.

ரவி கருணநாயக்கவை புகழும் சம்பந்தன், தனது கட்சியால் நிர்வகிக்கப்படும் வட மாகாண சபையில் நாற்றமெடுக்கும் ஊழல்கள் மோசடிகள் பற்றி மட்டும் கள்ளத்தனமான மௌனம் சாதிக்கிறார். அதேபோல, தனது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எ·.ப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்தின் சுமத்தும் குற்றச்சாட்டுகள் பற்றியோ, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக் கூட்டணி வீ.ஆனந்தசங்கரி போன்றோர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் பற்றியோ வாய் திறக்காமல் மௌன விரதம் அனுட்டிக்கிறார்.

சம்பந்தன் போன்ற 'கதாநாயகர்கள்' பற்றிப் பேசும் போது, கதாநாயகர்களுக்கு அடுத்த முக்கியத்துவம் உள்ள நகைச்சுவை நடிகர்களைப் பற்றியும் பேசாவிட்டால், அந்தப் பேச்சு பூரணத்துவம் பெறாது.

நாடு முழுவதும் கொழும்பில் செயற்படும் 'சைற்றம்' எனப்படும் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடிக் கொண்டு இருக்கிறது. இலவசக் கல்வியைப் படிப்படியாக அரித்துத் தின்பதற்கான ஒரு வெள்ளோட்டமாக ஆரம்பிக்கப்பட்ட அக்கல்லூரியை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பதே அனைத்து மாணவர்களினதும், நாட்டு மக்களினதும் ஏகோபித்த கோரிக்கையாகும். இந்தப் போராட்டத்தில் இன, மத, பிரதேச வேறுபாடின்றி அனைத்து மக்களும் ஈடுபட்டு வருகின்றனர். சொல்லப்போனால், 1953இல் அப்போதைய ஐ.தே.க. அரசுக்கு எதிராக நாட்டின் அனைத்து மக்களும் கிளர்ந்து எழுந்து போராடியதற்குப் பின்னர், இந்த சைற்றத்துக்கு எதிரான போராட்டமே நாடு தழுவிய போராட்டம் எனலாம்.

நிலைமை இவ்வாறு இருக்க, தமிழ் அரசியல் கோமாளிகளில் ஒருவரான எம்.கே.சிவாஜிலிங்கம் என்பவர், 'நாட்டுக்கு சைற்றம் போல 10 சைற்றங்கள் தேவை' என அண்மையில் பொன்னான கருத்தொன்றை உதிர்த்திருக்கிறார். இப்படியானவர்களை போய் என்னவென்று சொல்வது? நாடு முழுவதும் ஒரு திசையில் பயணிக்க இவர்கள் போன்றவர்கள் எப்பொழுதும் ஒரு எதிர் ஓட்டம் ஓடும் போக்கே தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு எழுதாத விதியாக இருந்து வருகிறது. உலகினதும் நமது நாட்டினதும் பொதுவான அரசியல் ஓட்டத்துக்கு எதிராகவே எப்பொழுதும் தமிழ் தலைமைகள் இருந்து வருவதை ஒப்பிடுவதுற்கு காலஞ்சென்ற தோழர் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் சொன்ன ஒரு ஒப்பீடுதான் இதை நினைக்க ஞாபகத்துக்கு வருகிறது.

அதாவது, காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் 'யாழ்தேவி' புகையிரதத்தில் ஏறி இருக்கும் தமிழரசுக் கட்சி தலைவர் எஸ்ஜே.வி. செல்வநாயகம், தான் காங்கேசன்துறை செல்வதாகக் கூறிக்கொண்டு, முன் பெட்டியிலிருந்து பின் பெட்டி நோக்கி நடப்பது போன்றதுதான் தமிழ் அரசியல் தலைமையின் போக்கு என தோழர் கார்த்திகேசன் நகைச்சுவையாகக் கூறுவார். அவரது ஒப்பீடு இன்றைய தமிழ் தலைமைக்கும் அச்சொட்டாகப் பொருந்தக்கூடியது என்பதில் சந்தேகம் இல்லை.

# மக்கள் ஆதரவு எதிரணிக்கே!

## தேர்தல் முடிவுகள் காட்டும் உண்மை!!

மைத்திரி – ரணில் அரசு என்னதான் தாம் 'நல்லாட்சி' நடாத்துவதாக உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் புளுகித் திரிந்தாலும், மக்களின் ஆதரவு ஒன்றிணைந்த எதிரணிக்கே அதிகரித்து வருவதைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. அண்மையில் நடந்து முடிந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தல் முடிவுகள் இந்த உண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்தின் கொடகவெல கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் போட்டியிட்ட எதிரணி ஆதரவு பெற்ற வேட்பாளர்களில் 29 பேர் வெற்றி பெற்று நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளனர். ஐ.தே.க. வேட்பாளர்கள் படுதோல்வி அடைந்தனர். இந்தத் தேர்தலை நடைபெற விடாது தடுப்பதற்கு ஐ.தே.க. குண்டர்கள் பல இடையூறுகளைச் செய்ததுடன், தேர்தல் அதிகாரிகளை மிரட்டிய போதும், மக்கள் துணிவுடன் முன்வந்து எதிரணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்களித்து அவர்களை அமோக வெற்றிபெற வைத்துள்ளனர். ஐ.தே.க. காடையர்களின் இடையூறுகள் காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் மிகுதியாகவுள்ள 19 கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அதிகாரிகள் ஒத்தி வைத்துள்ளனர்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஆராய்ச்சிகட்டுவ கூட்டுறவுச் சங்கத்துக்கு நடைபெற்ற தேர்தலில் எதிரணி ஆதரவு பெற்ற வேட்பாளர்களுக்கு 175 வாக்குகள் கிடைத்து அமோக வெற்றி பெற்றுள்ளனர். இத்தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.கவுக்கு 9 வாக்குகளும், ஜே.வி.பிக்கு 2 வாக்குகளும், ஜனாதிபதி மைத்திரியின் அணிக்கு 1 வாக்கும் மட்டுமே கிடைத்துள்ளன.

அதேபோல, மாதம்பே கூட்டுறவுச் சங்கத்துக்கு நடைபெற்ற தேர்தலில் எதிரணி ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் 141 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளனர். ஐ.தே.க. 40 வாக்குகளும் மைத்திரியின் அணி 1 வாக்கும் மட்மே பெற்றுள்ளன.

இதற்கு முன்னதாக அம்பலாங்கொடவிலும், மைத்திரியின் சொந்த மாவட்டமான பொலநறுவவிலும் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களில் எதிரணி ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் ஐ.தே.கவையும், மைத்திரி அணியையும் தோற்கடித்து அமோக வெற்றி பெற்றிருந்தனர்.

இந்தத் தேர்தல் முடிவுகள் இலங்கையிலுள்ள அடிமட்ட மக்களின் மன உணர்வுகளைப் அச்சொட்டாகப் பிரதிபலிப்பனவாக உள்ளன. இன்றைய சூழலில் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடைபெறுமாயின், ஒன்றிணைந்த எதிரணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறக்கூடிய சூழல் நிலவுவதையே இந்த முடிவுகள் எடுத்துக் காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

அதனால்தான் மைத்திரி – ரணில் அரசு பல்வேறு சாக்குப்போக்குகளைச் சொல்லி உள்ளூராட்சித் தேர்தல்களையும், மாகாண சபைத் தேர்தல்களையும் உரிய காலத்தில் நடாத்தாது இழுத்தடித்து வருகின்றது.

ஆனால், அரசாங்கம் எவ்வளவு காலத்துக்கு இந்தத் தேர்தல்களை நடாத்தாது இழுத்தடிக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது படுமோசமான தோல்வியையே சந்திக்க வேண்டி வரும் என்பதே யதார்த்த நிலவரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூ, ஜே.வி.பி. உதவியுடன் அரச ஊழியர்களின் ஜனநாயக உரிமையைப் பறித்துள்ளது 'நல்லாட்சி' அரசு!




உள்ளூராட்சி சபைகள் திருத்தச் சட்டமூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசில் அங்கம் வகிக்காது அதேநேரத்தில் அரசுக்கு முண்டு கொடுத்து வரும் போலி எதிர்க்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அரசை விமர்சிப்பதாகப் பாசாங்கு செய்துகொண்டு அரசை மறைமுகமாக ஆதரித்து வரும் இன்னொரு கட்சியான ஜே.வி.பியும் இந்தச் சட்ட மூலத்தை ஆதிரித்து வாக்களித்துள்ளன. அதுமாத்திரமின்றி, இந்தச் சட்டமூலத்தை ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க வானளாவப் புகழ்ந்தும் உள்ளார். (த.தே.கூ. சட்ட மூலத்தை ஆதரித்து வாக்களித்துவிட்டு, அதன் தலைவர் சம்பந்தன் அதை மறைப்பதற்காக கபடத்தனமாக அரச ஊழியர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதைத் தடுக்கக்கூடாது என அறிக்கையும் விடுகின்றார்)

அதேநேரத்தில் அவசரம் அவசரமாகக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமூலத்தைப் படித்துப் பார்க்கப் போதிய அவகாசம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தாலும், இந்தச் சட்டமூலத்தில் பல ஜனநாயக விரோத அம்சங்கள் உள்ளதாகக் கருதுவதாலும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி இந்தச் சட்டத் திருத்த வாக்களிப்பில் கலந்து கொள்ளாது புறக்கணித்துள்ளது.

பல உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்தும் அரசாங்கம் தோல்விப் பயம் காரணமாக ஒன்றரை வருடங்களாக அவற்றின் தேர்தல்களை நடாத்தாது இழுத்தடித்து வருகின்றது. விரைவில் காலம் முடிவடைய இருக்கும் வட மத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாணசபைகளின் தேர்தல்களையும் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. 'நல்லாட்சி' அரசின் பங்காளிக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், அமைச்சர் மனோ கணேசனின் கட்சியும் அரசின் இந்த முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும், ஐ.தே.க. தலைமையிலான அரசு தன் திட்டத்தில் விடாப்பிடியாக நிற்கிறது.

இந்த உள்ளூராட்சி சபைகள் திருத்தச் சட்டத்தில் உள்ள இன்னொரு ஜனநாயக விரோத அம்சம் என்னவெனில், தற்போது நடைமுறையில் இருப்பது போல அரசாங்க ஊழியர்கள் வருங்காலத்தில் தொழிலில் இருந்துகொண்டு தேர்தலில் போட்டியிட முடியாது என்பது. அவர்கள் தேர்தலில் ஈடுபடுவது என்றால், தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு வருடத்துக்கு முன்பே பதவியில் இருந்து விலகிவிட வேண்டும். இந்த ஜனநாயக விரோதச் சரத்தை சட்டமூலத்தில் நீக்கும்படி ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஒரு திருத்தத்தைச் சமர்ப்பித்த போதும் அரசாங்கம் அதை நிராகரித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோதப் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, சிறீ.ல.சு.கட்சியைச் சேர்ந்த அமைச்சர் டபிள்யு.ஜே.எம்.செனவிரத்ன வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்துள்ளார். தனது புறக்கணிப்பு சம்பந்தமாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர், "இந்தத் திருத்தச் சட்டம் அரச ஊழியர்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதால், இதை ஆதரித்து வாக்களிக்க எனது மனச்சாட்சி இடம் தரவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஜனநாயக விரோதச் சட்டத் திருத்தம் சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார, ''இந்த அரசுக்கு பொதுமக்கள் மத்தியில் மட்டுமின்றி, அரச ஊழியர்கள் மத்தியிலும் நாளுக்குநாள் எதிர்ப்பு வளர்ந்து வருவதால், அவர்களைத் தேர்தல்களில் கலந்து கொள்ள விடாமல் தடுப்பதற்கே அரசு இவ்வாறான ஜனநாயக விரோதச் சட்டங்களைக் கொண்டு வருகிறது. அரச ஊழியர்கள் தேர்தலில் போட்டியிட அரசு தடை விதித்தால், அவர்களுக்குப் பதிலாக அவர்களது வாழ்க்கைத் துணைவர்களை தேர்தலில் போட்டியிட வைப்போம்'' எனக் கூறியிருக்கிறார்.

---

போல்ஷிவிசம் குறித்து யார் என்ன நினைத்தாலும், ருஷ்யாவின் புரட்சி மனித வரலாறிறிலே மாபெரும் நிகழ்சிசிகளில் ஒன்றாகும் என்பதிலும், போல்ஷிவிக்குகள் உயர்ந்தெழுந்தது உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதிலும் ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

**–உலகைக் குலுக்கிய பத்து நாட்கள் நூலின் முன்னுரையில் ஜான் ரீடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளன! அரசைச் சாடுகிறார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த்!!

தற்போதைய அரசாங்கத்தின் சில நடடிக்கைகளுடன் தன்னால் உடன்பட முடியவில்லை என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளரும், தற்போதைய அரசில் சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சுப் பதவி வகிப்பவருமான சுசில் பிரேமஜயந்த் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்திருக்கிறார். மேலும் அவர் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:

''சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்துக்களை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்வதில்லை.

சிலர் அதிகாரத்துக்கு வரும்போது அரச வளங்களை விற்கும் எண்ணத்துடனேயே வருகின்றனர். ஆனால் சிறீ.ல.சு.கட்சி அவ்வாறான ஒரு கட்சி அல்ல.

முன்னைய ஐ.தே.க. அரசுகளிடம் அரச சொத்துக்களை விற்கும் ஒரு நடைமுறை இருந்தது. ஆனால் சிறீமாவோ தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசு மேற்குலகின் அதிகாரத்தின் கீழ் இருந்த பல அரச நிறுவனங்களை மீண்டும் நாட்டுடமை ஆக்கியது.

ஐ.தே.கவினர் முன்னைய காலங்களில் அரச சொத்துக்களை விற்ற நடைமுறையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். சமீபத்தில் அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 சதவீதமான பங்குகளை சீன நிறுவனம் ஒன்றுக்கு விற்றுள்ளது. அப்படி விற்பனை செய்யாமல் சரியான திட்டத்தின் அடிப்படையில் அதை நிர்வகித்திருக்க முடியும். அதற்கான திறமையும் ஆற்றலும் மிக்க ஆட்கள் எம்மிடம் உண்டு.

என்ன நடக்கிறது என்றால், இந்த நாட்டில் கொள்கையை வகுப்பவர்கள் தொழில்வாண்மையாளர்களின் (Professionals) ஆலோசனைகளைக் கேட்பதில்லை.

சரியான திட்டமொன்று இருந்திருப்பின் அரசாங்கம் வாக்குறுதி அளித்தபடி 1 மில்லியன் இளைஞர்களுக்கு நிச்சயம் வேலைவாய்ப்பு அளித்திருக்க முடியும்.

ஒவ்வொரு வர்த்தக நிறுவனமும் ஒரு சரியான வர்த்தகக் கொள்கையை வைத்திருக்க வேண்டும். முதலாவதாக, அரசாங்கம் ஒரு அரச நிறுவனத்தைச் சரியாக நிர்வகிக்கும் நிலையில் உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு திட்டம் வெற்றியளிக்கவில்லை என்றால் இன்னொரு திட்டத்தை நிச்சயமாகச் செயல்படுத்த வேண்டும். நான் நினைக்கிறேன், இந்த அரசாங்கம் எந்தவிதமான செயல் திட்டமும் இல்லாமல் அரச வளங்களை விற்கும் எண்ணத்துடனேயே பதவிக்கு வந்திருக்கிறது.

முழு உலகமும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் வெவ்வேறு பாதைகளில் முன்னேறிச் செல்கிறது. எமது நாடு ஒரு விரைவான செயற்பாட்டுத் தேவையை உணராமல் அரச வளங்களை சில நாடுகளுக்கு விற்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. அப்படிச் செய்வது நாம் எங்கே செல்கிறோம் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அடுத்ததாக சிறீலங்கன் விமான சேவையை விற்கும் சாத்தியக்கூறு உண்டு. கச்சதீவு கூட அதுமாதிரி விற்கப்படலாம்''

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் இவ்வாறு கூறினார்.

# ஊழலுக்கு எதிரான விசாரணை அலுவலகம் மூடப்பட்டது!

ஊழலுக்கு எதிரான விசாரணை அலுவலகத்தை (Anti-Corruption Committee Secretariat) மூடிவிடுவதென அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2015 ஜனவரி 08ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்த சிபார்சுக்கு அமைய இந்த அலுவலகம் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அந்த அலுவலகத்தை மூடிவிடும்படி பிரதமரே அமைச்சரவையில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அதை மூடுவதென அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

ஊழலுக்கு எதிரான இந்த விசாரணை அலுவலகம் கடந்த இரண்டரை ஆண்டுகளாக வாராவாரம் கூடி விசாரணைகளைப் பரிசீலனை செய்து வந்தது. இந்த அலுவலகத்துக்கு ஆறு விசாரணையாளர்களும், ஒரு விசாரணை ஆலோசகரும் நியமிக்கப்பட்டிருந்த அதேவேளையில், ஐந்து பணிப்பாளர்களும், ஐந்து ஆலோசகர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்காக வருடமொன்றுக்கு 12 மில்லியன் ரூபா (மக்களின் வரிப்பணம்) அரசாங்கத்தால் செலவழிக்கப்பட்டுள்ளது.
ஆனால் இந்த அலுவலகம் மிகப்பெரிய ஊழல்களை விசாரிப்பதை விடுத்து, சிறு சிறு சம்பவங்களையே விசாரணை செய்து வந்ததாகவும், அதிலும் குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், முக்கியஸ்தர்களையும் குறி வைத்தே விசாரணை நடாத்தப்பட்டு வந்ததாகவும், அக்கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவரது கட்சியினர் தொடர்ந்து முறையிட்டு வந்தனர்.

அதனைத் தொடர்ந்து, அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றில் இந்தச் செயலகத்தின் செயற்பாடுகளை வன்மையாகச் சாடிய ஜனாதிபதி, ஊழலுக்கெதிரான விசாரணைகளைச் சரியான முறையில் முன்னெடுக்க முடியாவிடின், அந்தப் பொறுப்பை தம்மிடம் மூன்று மாதங்களுக்குத் தந்து பார்க்கும்படி ஆக்ரோசமாகக் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கடுமையான விமர்சனத்தின் காரணமாகவே பிரதமர் ரணில் அந்த அலுவலகத்தை மூடும் முடிவை அமைச்சரவையில் சமர்ப்பித்ததாகக் கூறப்படுகிறது. (அதாவது நோயாளியைக் குணப்படுத்த முடியாவின் அவரைக் கொன்று பிரச்சினையைத் தீர்ப்பது போல)

அமைச்சரவையின் இந்த முடிவு குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சரவையின் இணைப் பேச்சாளரான ராஜித சேனரத்ன, "நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றவாளிகளை தண்டிப்பதாக நாம் மக்களிடம் வாக்குறுதி அளித்திருந்தோம். ஆனால், நாம் அது சம்பந்தமாக எதனையும் செய்யவில்லை. அதனால் மக்கள் எம்மில் நம்பிக்கை இழந்து விட்டனர்" என்று கூறியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த கல்விச் சிந்தனையாளருமான தோழர் மு. கார்த்திகேசன் அவர்களின் 40ஆவது நினைவு தினத்தையொட்டி (2017 செப்ரெம்பர்) இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

# எம் மத்தியில் - எம் கார்த்திகேசன்

*எம்.குமாரசாமி*



**யா**ழ் குடாநாட்டின் அரசியல், கல்வி, கலாச்சாரத்துறைகளில் 1944ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டுவரை தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவரும், இத்துறைகளின் முன்னேற்றங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு, அவற்றை முன்னெடுத்துச் சென்ற அறிஞர்களில் காலஞ்சென்ற மு.கார்த்திகேசன் ஒரு தனியிடத்தைப் பெற்றவராவார். அவர் இறந்து இவ்வருடம் (2002) செப்டெம்பர் மாதத்துடன் 25 ஆண்டுகள் கழிகின்றன. அவர் அரசியலுக்காக கம்யூனிஸ்ட் கட்சியையும், கல்விக்காக ஆசிரியத் தொழிலையும், கலை கலாச்சாரத்திற்காக அவர் வாழ்ந்த வண்ணார்பண்ணைப் பகுதியிலுள்ள சமூக நிறுவனங்களின் ஈடுபாட்டையும், மாநகரசபைசபை வரியிறுப்போர் சங்க உறுப்புரிமைக்காக யாழ்மாநகரசபை அங்கத்துவப் பதவியையும் பயன்படுத்தினார். சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இவர் தன் முழுக்கவனத்தைக் காலநேரம் பாராது, சாதி சமயம் பாராது, பிரதிபலன் நோக்காது செலுத்தியமைக்கான ஒரேயொரு காரணமென்னவெனில், அவர் ஒப்பற்ற உன்னதமான சமூகப் பங்காளனாகச் சமூகத்தை நேசித்த தலைசிறந்த வழிகாட்டி. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை யாழ் மாவட்டத்தில் ஸ்தாபித்து, அதன் சித்தாந்தத்தை அன்றைய காலகட்டத்தில் அங்கு வேரூன்ற வழிவகுத்த சிறந்த போதானாசிரியர். இவர் இலங்கைக் கம்யூனிஸ்ட்டுகளின் பரம்பரையில் முதற் பரம்பரையைச் சேர்ந்தவராவார்.

**இலங்கை வருகை**

கார்த்திகேசனின் கம்யூனிஸ்ட் வாழ்க்கை நெறி, அவர் அன்றைய மாலாயாவிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் மேற்கல்வி பெறுவதற்காக அவரது தகப்பனால் அனுப்பப்பட்ட காலந்தொட்டே ஆரம்பமாகிறது. மலாயாவில் லண்டன் மெர்ரிகுலேசன் படிப்பை முடித்துக் கொண்டு கொழும்பு வந்து கல்வி கற்ற காலத்தில் பல்கலைக்கழகக் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தார். இவர் கலைப்பிரிவிலே கல்வி பயின்றபோது சமகாலத் தோழர்களான என்.சண்முகதாசன், எல்.ஆரியவன்ச, எஸ்.கே.கந்தையா, ஏ.சிவலிங்கம் போன்றோரும் அங்கே கல்வி பயின்று வந்தனர். இக்காலகட்டத்தில் ஏ.வைத்திலிங்கம் அவர்கள் மேற்படிப்புக்காக இலண்டன் சென்றிருந்தார். மேற்குறிப்பிட்டவர்களில் என்.சண்முகதாசன், எல்ஆரியவன்ச ஆகியோர் கார்த்திகேசன் வகுப்பிலிருந்த சகபாடிகளாவர். இடதுசாரிப் போக்குடைய இத்தகைய மாணவர் மேல் முன்னாள் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினரும், கணிதப் பேராசிரியருமான காலஞ்சென்ற சி.சுந்தரலிங்கம் அவர்களின் கடைக்கண் பார்வையும் விழுந்திருந்தது. இவர்களில் இன்றும் வாழ்பவர் முன்னாள் உலக ஆசிரிய சங்க சம்மேளனத்தின் தலைவரும், இன்றைய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு உறுப்பினருமான எல்ஆரியவன்ச அவர்களேயாகும். அக்காலகட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக மேற்பார்வையாளராக சுந்தரலிங்கம் அவர்கள் விளங்கினார்.

**பிறநாட்டுச் சூழ்நிலை**

இக்காலகட்டத்திலே ரஸ்யாவில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சியின் தாக்கமும், மேற்கு நாடுகளில் ஏற்பட்ட விடுதலைப் போராட்டங்களும், ஸ்பானியக் குடியரசின் உதயமும், உலகளாவிய ரீதியில் மாணவர் மத்தியில் அரசியல் உணர்வைக் கூர்மைப்படுத்தின. பீற்றர் கெனமன் அவர்களும், வைத்திலிங்கம் அவர்களும் 1936 – 1939 காலப்பகுதியில் நடைபெற்ற ஸ்பானிய யுத்தத்தில், ஸ்பானியக் குடியரசுக்கு உதவுவதற்காக ஐக்கிய ராஜ்யத்திலிருந்து கொண்டே சர்வதேசத் தொண்டர் சபையில் பணியாற்றி வந்தனர். இந்நேரத்தில் பல்கலைக்கழகக் கல்லூரியில் என்.சண்முகதாசன் தலைமையில் மாணவர் கவுன்சில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சோவியத் ரஸ்யாவுக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டிருந்தது. எல்ஆரியவன்ச அவர்களே அந்தக் கவுன்சிலின் செயலாளராகக் கடமையாற்றினார். காரத்திகேசன் அவர்கள் கவுன்சிலின் பிரச்சார நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, அரசியல் செய்திகள் கட்டுரைகளைத் தாங்கி வந்த 'மாணவர் செய்தி – student News' என்ற ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

**கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பமும் முழுநேர ஊழியமும்**

இந்தப் பின்னணியில், இளம் சோவியத் யூனியனுக்கு ஏகாதிபத்தியவாதிகளின் அச்சுறுத்தல் ஏற்பட, உலகெங்குமுள்ள புரட்சிகரச் சிந்தனையுடையோர் சோவியத் யூனியனுக்கு ஆதரவாக இயக்கங்களை ஆரம்பித்தனர். இலங்கையிலும் 'சோவியத் நண்பர்கள்' என்ற அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பின் முக்கிய பங்குதாரராக கார்த்திகேசன் இருந்தார். பின்னர் இந்த ஸ்தாபனம் பீற்றர் கெனமன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.வைத்திலிங்கம் ஆகியோரின் வருகையுடன் 1940ம் ஆண்டளவில் ஐக்கிய சோசலிசக் கட்சியாகப் பரிணமித்தது. 1943ல் ஐக்கிய சோசலிசக் கட்சி கலைக்கப்பட்டு, டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், என்.சண்முகதாசன், எல்.ஆரியவன்ச போன்றோருடன் கார்த்திகேசனும் சேர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். கட்சியின் பொதுச்செயலாளராகப் பீற்றர் கெனமனே பணியாற்றினார். கட்சியின் அடிப்படைச் சித்தாந்தம் மார்க்சிசம் ~ லெனினிசம் ஆகவேயிருந்தது. கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சிக்காக 1945களில் கட்சி முழுநேர ஊழியர்களை நியமித்தது. பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பல பல்கலைக்கழக மாணவர்கள், கட்சியின் வளர்ச்சியிலும், தொழிற்சங்க நடவடிக்கைளிலும் ஈடுபட்டார்கள். டாக்டர் விக்கிரமசிங்கவைத் தவிர பல முக்கிய உறுப்பினர்கள் இந்தத் துறைகளில் முன்னின்று உழைத்தனர். கார்த்திகேசனை அவது தந்தை இலங்கைக்கு அனுப்பி சி.சி.எஸ். (C.C.S. - சிலோன் சிவில் சேர்வீஸ்)அரச சேவையில் சேர்க்க விரும்பினார். ஆனால் கார்த்திகேசன் சி.சி.பி (C.C.P. – சிலோன் கம்யூனிஸ்ட் கட்சி)யில் சேர்ந்து கொண்டது தகப்பனாருக்குத் திருப்தியளிக்கவில்லையென அவர் தெரிந்திருந்தும், இலங்கைத் தொழிலாள வர்க்கத்திற்கும், அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்கும் பணியாற்ற வேண்டுமென்ற பேரார்வமும், அர்ப்பணிப்பும் அவரை ஓர் முழுநேர ஊழியராக்கியது.

பீற்றர் கெனமன் ஏரிக்கரைப் (Lake House) பத்திரிகை ஸ்தாபனத்தில் வேலை செய்து அப்பதவியைத் துறந்த பின்னரே கட்சியின் பொதுச்செயலாளராகச் செயற்பட்டார். சண்முகதாசன் சி.சி.எஸ். அரச பதவியை ஒதுக்கிவிட்டு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் முழுநேர ஊழியரானார். வைத்திலிங்கம் அவர்கள் அரச பதவிகளுக்குத் தேடிச்செல்லாது தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்வதற்காக மலைநாடு சென்றார். கார்த்திகேசன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு கெனமனோடு சேர்ந்து 'போர்வேட் - Forward' பத்திரிகையை அச்சடித்துப் பிரசுரித்து, விநியோகித்து, விற்பனை செய்து வந்தார். கட்சிக் காரியாலயத்திலேயே வசித்தும் வந்தார். பெரிய அரச பதவிகள் தேடிவந்தும் அவற்றைத் தட்டிக் கழித்தார். கட்சிக்கு நிதி கிடைக்கும் போது முழுநேர ஊழியர்கட்கு சிறிதளவு நிதியுதவி கிடைக்கும். நிதி இல்லாத போது முழுநேர ஊழியர்கள் அனைவரும் கஸ்டப்பட்டே கட்சி வேலைகளிலும், தொழிற்சங்க வேலைகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

**கட்சி வேலையும், கல்விச் சேவையும்**

கம்யூனிஸ்ட் கட்சி அதன் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் பொருட்டு கார்த்திகேசனை யாழ்ப்பாணம் செல்லுமாறும், அங்கு ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்வதுடன், கட்சிப் பணிகளை மேற்கொள்ளுமாறும் பணித்தது. இதற்கமைய கார்த்திகேசன் யாழ்ப்பாணம் வந்து, நகரின் விக்ரோறியா ரோட்டில் வாடகை வீடொன்றில் வசிக்க ஆரம்பித்தார். அவர் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். காலக்கிரமத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பகால உறுப்பினர்களாக ஆர்.ஆர்.பூபாலசிங்கம், எம்.சி.சுப்பிரமணியம், ஏ.அற்புதரட்ணம், அ.சரவணமுத்து, ராமசாமி ஐயர் ஆகியோர் இருந்தனர். செயலாளராக கார்த்திகேசன் செயற்பட்டார். இவர்கள் மூலமாகவே கட்சி யாழ் மாவட்டத்தில் அறிமுகமானது. கார்த்திகேசன் யாழ் இந்துக் கல்லூரியில் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்தே கம்யூனிஸ்ட் இயக்கமும் யாழ் மாவட்டத்தில் வேரூன்றியது என்றால் மிகையாகாது. கல்லூரியில் சிறந்த கணித, ஆங்கில ஆசிரியராகவும், கல்லூரிக்கு வெளியே ஓர் சமூக சேவையாளனாகவும், ஓர் அரசியற் போதனாசிரியராகவும், பார்வைக்கு எளிமையானவராகவும் விளங்கினார்.

கட்சியின் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணத் தொகுதிக்கு 1956இலும், நல்லூர் தொகுதியில் 1960இலும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டார். வாக்குரிமையற்ற மாணவர்களே இவரது கூட்டத்தில் ஏராளமாகக் கூடி நின்றனர். அறிவு செறிந்த, அரசியல் தத்துவத்துடன் கூடிய, ஹாஸ்யம் நிறைந்த இவரின் பேச்சுகளைக் கேட்கவே மாணவர்களும், வாலிபர்களும் இவரைச் சூழ்ந்து நின்றனர். யாழ்ப்பாணம் வந்த நாளிலிருந்தே துவிச்சக்கர வண்டியையே தனது நடமாட்டத்திற்குப் பாவித்ததினால் மக்களால் அவரை இலகுவில் அணுக முடிந்தது.

யாழ் இந்துக் கல்லூரியில் 1946 இலிருந்து 1971 மே மாதம் வரை சேவை செய்தார். இதில் 1971 ஜனவரி தொடக்கம் அவ்வாண்டு மே மாதம் வரை அதிபராகக் கடமையாற்றினார். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் சங்கக் கூட்டங்களுக்கு இவரைப் பேச்சாளராக அழைத்தனர். மாணவர் மன்றங்களில் விசேச சொற்பொழிவுகளுக்காக இவர் அழைக்கப்பட்டார். பிரபல்யமான பாடசாலைகளிலிருந்து வைபவங்களுக்கு அழைக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டு, உரை வழங்க வேண்டப்பட்டார். இது தொடர்பாகக் கல்லூரி மாணவர்கள் இவரைத் தேடி வருவது சாதாரண நிகழ்வாகும்.

யாழ் இந்துக் கல்லூரியில் இவர் கடமையாற்றிய காலமே பொற்காலம் எனலாம். சிறந்த அறிஞர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். யாழ் பல்கலைக்கழக வளாகம் ஆரம்பித்த போது தலைவராகவும், பின்னர் பல்கலைக்கழகம் பல மாடிக் கட்டிடமாகப் பரிணமித்த போது அதன் உப வேந்தராகவும் விளங்கிய கைலாசபதியும், தற்போதைய உப வேந்தராக விளங்கும் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் இவரின் மாணவர்களேயாகும்.

1947ல் இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு 1976 யூன் 25ந் திகதி வரை, அதாவது கார்த்திகேசன் இளைப்பாறும் வரை, அவர் கல்விக்காக ஆற்றிய பங்கு அபரிமிதமானது. வண்ணார்பண்ணையில் வாழ்ந்த போது அவரின் வீடு காலையிலும் மாலையிலும் மாணவர்களின் வருகையால் நிறைந்திருக்கும். இவ்வாறு அவர் வீடு சென்றவர்களில் பலர் பின்னர் கட்சி உறப்பினர்களாகவும், அனுதாபிகளாகவும் மட்டுமின்றி, காத்தி அனுதாபிகளாகவும் மாறியுள்ளனர்.

1960களில் இயங்கிய வில்மட் பெரேரா தலைமையிலான தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு யாழ் இந்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி ஆசிரியர் குழு மகஜர் ஒன்று சமர்ப்பித்தது. அந்த மகஜரின் உள்ளடக்கம் பின்னர் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மகஜருக்கு எழுத்து வடிவம் கொடுத்தவர் கம்யூனிஸ்ட் கார்த்திகேசனேயாகும்.

யாழ் குடாநாட்டிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையாக இருந்தது. 1974ல் யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதும், அதன் தலைவராக தனது மாணவன் கைலாசபதி பொறுப்பேற்றது பற்றியும் அடிக்கடி பிரஸ்தாபித்து சந்தோசப்படுவது கார்த்திகேசனின் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியிலுள்ள ஈடுபாட்டை எடுத்தியம்பியது. மேலும் யாழ் பல்கலைக்கழக வளாக விஸ்தரிப்பு இயக்கத்தின் உப தலைவராக விளங்கி, யாழ் பல்கலைக்கழக வளாகம் பல்கலைக்கழகமாக மாறவும், அது பரிபூரணமான சகல பீடங்களையும் உள்ளக்க வேண்டுமென குடாநாடு முழுவதும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வந்தார்.

இக்காலகட்டத்தில் அவர் இலங்கை தேசிய ஆசிரிய சங்கத்தின் (ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கமய) உப தலைவராகவும் செயற்பட்டார்.

1960 தொடக்கம் 1971 வரையிலான காலத்தில் ஆசிரியர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தார். இதற்காக ஆசிரியர் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியைப் பயன்படுத்தி 1960ல் இலங்கை அரசாங்கம் நாட்டிலுள்ள பாடசாலைகளை அரசாங்கமயப்படுத்த உதவினார். 1968ல் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்றான சென்.ஜோன்ஸ் கல்லூரியிலிருந்து ஆசிரிய உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததிற்காக ஆர்.பானுதேவனும் வேறு சில ஆசிரியர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்ட போது, ஆசிரிய தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளிலும் முன்னின்று உழைத்தார். மீண்டும் பானுதேவனுக்கு வேலை வழங்குமாறு மேல் நீதிமன்றம் 1976ல் உத்தரவு பிறப்பிக்கும்வரை, தொழிற்சங்க கூட்டுக் கமிட்டிக்கும் பானுதேவனுக்கும் உறுதுணையாகவிருந்தார். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதின் பிரகாரம், ஆசிரியர் தத்தமது அரசியல் உரிமைகளை இழந்தனர். கார்த்திகேசனுக்கு ‘M’ என்ற ஆங்கில எழுத்திலும் ‘K’ என்ற எழுத்திலும் அலாதி விருப்பம். தனது கட்சிப் பெயரை K.Maniccavasagar என மாற்றிக் கொண்டதுடன், எனக்கும் K.Muththusamy என்ற பெயரைச் சூட்டினார். 1963 முதல் 1965 வரை கார்த்திகேசன் அரசியல் வகுப்புகளை நடத்துவதில் மிகவும் அக்கறை காட்டி, வடக்கிலுள்ள எண்ணற்ற கிராமங்களுக்குச் சென்றார். இவருக்கு உதவியாக க.ஜனகா பணியில் இறங்கினார். இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் யாழ் மாநாட்டின் போதும், அதனைத் தொடர்ந்து 1964, 1965களிலும் கூடுதலான கட்சி உறுப்பினர்கள் கட்சியில் சேர்ந்தனர். கணிசமான உறுப்பினர்கள் வடமராட்சிப் பகுதியிலிருந்து வந்தனர். 1965ல் வடமராட்சி நெல்லண்டையில் கவிஞர் பசுபதி அரங்கில் நடைபெற்ற மார்க்சிசக் கல்விப் பட்டறையில் முக்கிய மார்க்சிசப் போதானாசிரியராக விளங்கிப் பல முன்னணித் தோழர்களை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு ஈர்த்தவர் அவரே.

கார்த்திகேசன் அவர்கள் யாழ் இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியராக இருந்த காலத்தோடு, 1971 ஜனவரி மாதம் அதிபராக நியமிக்கப்பட்டு, மே மாதம் வரை அங்கு கடமையாற்றிய பின்பு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் அதிக நாள் கடமை புரியவில்லை. எவ்வாறு இருப்பினும் யாழ் இந்துக் கல்லூரியிலும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் அதிபராகச் சேவை புரிந்த காலத்தே அங்கள்ள ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அன்புக்கும் மரியாதைக்கும் கட்டுண்டிருந்தார். 1972 ஜனவரி தொடக்கம் 1976 யூன் 25 வரை (அவரது பிறந்த நாள் யூன் 25) பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலே அதிபராகச் சேவை செய்த காலத்தே வட்டுக்கோட்டைப் பகுதியிலே பொதுமக்களின் அன்புக்குப் பாத்திரமானார். அப்பிரதேசத்திலே நடைபெற்ற சமூகப் பெருவிழாக்களிலே பேச்சாளராகப் பங்குபற்றியதோடல்லாமல், சமூக சேவையாளராகவும் மிளிர்ந்தார். கட்சி நடவடிக்கைகளும் இந்தக் காலகட்டத்தில் மந்த நிலையிலேயே இருந்தன. கார்த்திகேசனின் சேவையை மக்கள் தொடர்ந்தும் பெறுவதற்காகவே அவர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலிருந்து இளைப்பாறியபோது, அவருக்கு பாடசாலை ஆசிரியர்கள் ஓர் தட்டச்சு இயந்திரத்தையும், துவிச்சக்கர வண்டியையும் அன்பளிப்புச் செய்ததுடன், கண்ணீர் மல்கிய பிரியாவிடையையும் வழங்கினர்.

**கட்சியின் வளர்ச்சியும் பின்னடைவும்**

1947 இலிருந்து 1963 வரை யாழ் குடாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி பல்வேறு அரசியல், தொழிற்சங்க, சமூக முன்னேற்ற நடவடிக்கைகளின் மூலம் பலம் வாய்ந்த முதன்மையான இடதுசாரிக் கட்சியாக முன்னணிக்கு வந்தது. 1953 ஆகஸ்டில் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஹர்த்தால் இடதுசாரிகளின் சக்தியையும், பலத்தையும் நாட்டில் துல்லியமாகப் பிரகடனப்படுத்தியது. இந்தக் ஹர்த்தாலின் பிரதிபலப்பு 1956ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் மூலம் வெளிப்பட்டது. காலஞ்சென்ற பொன்னம்பலம் கந்தையா அவர்கள் 1956ல் பருத்தித்துறை தொகுதிக்கு கட்சி சார்பில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்து பல்வேறு மட்டங்களில் கட்சியின் செயற்பாடுகளில் கார்த்திகேசன், வைத்திலிங்கம், பொன்.கந்தையா, எம்.சி.சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, டாக்டர் சு.வே.சீனிவாசகம், இராமசாமி ஐயர், சுபைர் இளங்கீரன் போன்றோர் ஈடுபட்டு வந்தனர். கட்சியின் தலைமையில், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், அகில இலங்கை விவசாயிகள் சங்க சம்மேளனம், இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை, பின்னர் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், முற்போக்கு எழுத்தளர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் வெகுவீச்சுடன் இயங்கி வந்தன. இவற்றின் பின்னணியில் அச்சாணியாக விளங்கியவர் கார்த்திகேசனேயாவார்.

1960களில் இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ சார்பு, பீக்கிங் சார்பு என இரண்டாகப் பிரிந்தது. பின்னர் காலத்துக்குக் காலம் கருத்து வேறுபாடுகள் தோன்ற, கட்சியின் பல முன்னோடி உறுப்பினர்கள் கார்த்திகேசன் உட்பட, வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து சென்றனர். இந்நிகழ்வு

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்ஸல் இயக்கத்தின் தமிழகத் தூண்களில் ஒருவரான கோவை ஈஸ்வரன்!



**01.07.2017 இல் மறைந்த தோழர் கோவை ஈஸ்வரன் அவர்களுக்கு ‘வானவில்’ தனது அஞ்சலியைச் செலுத்துகின்றது.**

தமிழகத்தின் செங்கொடி வரலாற்றில் வீரத்தால், தியாகத்தால் எழுதப்பட்ட பெயர்... அப்பு. அன்று அவரின் பெயரைக் கேட்டாலே ஆண்டைகள் அஞ்சி நடுங்குவார்கள். அவ்வளவு போர்க் குணம் கொண்ட போராளி. நக்ஸல்பாரிகளின் தியாகங்களைத் தவிர்த்துவிட்டு, தமிழக அரசியல் மற்றும் பொருளாதார வரலாற்றை நேர்மையாக எவராலும் எழுத முடியாது. அப்பு, சீராளன், பாலன், இருட்டுப் பச்சை... போன்ற எண்ணற்ற பெயர்கள், இன்றைய தலைமுறை அறியாதவை ஆனால், அறிந்து கொள்ள வேண்டியவை. இன்றைய தலைமுறை அனுபவித்துக் கொண்டிருக்கும் சரிபாதி உரிமைகளுக்காக, இதற்கு முந்தைய தலைமுறையிலேயே உயிர்விட்டவர்கள் இவர்கள்.

தமிழக நக்ஸல்பாரிகளின் பயணம், எங்கிருந்து தொடங்கியது, எப்போது தள்ளாடத் தொடங்கியது? கோவை ஈஸ்வரன், நக்ஸல்பாரி இயக்கத்தில் அனுபவம் மிக்க தோழர் அப்பு, பாலன் ஆகியோரோடு பழகியவர். ஆயுத வழி அரசியலில் முரண்பட்டு விலகியிருந்தாலும், இன்று வரை மாவோயிஸ்ட்களின் அரசியல் கோட்பாடுகளுக்கு ஆதரவாளர். சென்னையில் வசிக்கும் ஈஸ்வரன், இரத்தம் படிந்த அந்தச் சிவப்பு நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்.

”கோபிசெட்டிபாளையம்தான் என் சொந்த ஊர். ‘பிராமணர்கள், கடல் கடந்து போகக் கூடாது; சிறை செல்லக் கூடாது’ போன்ற கடும் கோட்பாடுகளைக் கொண்ட பிராமணக் குடும்பத்தில் பிறந்தவன் நான். அப்பா ஜி.வி.வெங்கட்நாராயணன், சுதந்திரப் போராட்ட வீரர். 1921–ம் ஆண்டிலேயே ஒரு வருடம் சிறைக்குச் சென்று வந்ததால், எங்கள் குடும்பத்தை சாதிப் புறக்கணிப்பு (சாதிப் பிரஷ்டம்) செய்தனர். சாதி மீது இருந்த பற்றை விட, நாட்டின் விடுதலை மீது இருந்த பற்று அதிகம். சுதந்திரப் போராட்டங்கள் பலவற்றில் பங்குபெற்றார். நாடு விடுதலை அடைந்த அடுத்த வருடமே, உடல் சுகவீனமடைந்து இறந்துவிட்டார்.

அப்புறம் நான் சொந்த ஊரைவிட்டு வெளியேறி, சென்னை மேற்கு மாம்பலத்தில் மாமா வீட்டில் தங்கிப் படிச்சேன். பள்ளி மாணவனா இருந்தப்போ, ம.பொ.சிவஞானத்தின் தமிழரசுக் கழகத்தில் இணைந்தேன். 1956–ம் ஆண்டில் நடந்த தேவிகுளம், பீர்மேட்டை தமிழகத்துடன் இணைக்கும் போராட்டம் தொடங்கி, மொழிக்காக நடந்த எல்லா போராட்டங்களிலும் இணைந்தேன். அப்புறம் மார்க்சியத்தில் ஈடுபாடு வந்து, அரசியல் ரீதியாகச் செயல்பட ஆரம்பிச்சோம். போராட்டம், சிறைவாசம் எல்லாம் சேர்ந்து படிப்பை என்னிடம் இருந்து பறிக்க, முழு அரசியல் வாழ்க்கைக்கு வந்தேன். அப்போ கம்யூனிஸ்ட் தலைவர்களாக இருந்த ஜீவா, பாலதண்டாயுதம் போன்றோருடைய தொடர்பு இருந்ததால், கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தோம். அதன் பிறகு மார்க்சிஸ்ட்டுகளுடன் முரண்பட்டு, நக்ஸல்பாரி இயக்கம் உருவானபோது அதன் தமிழக கிளையில் நான், அப்பு, பாலன்... போன்றோர் உறுப்பினர்கள் ஆனோம். இங்கே நக்ஸல்பாரி கிளர்ச்சியைப் பற்றி சொல்லிடுறேன். 1967–ம் ஆண்டில் மேற்கு வங்கத்தின் நக்ஸல்பாரி கிராமத்தில் விவசாய எழுச்சி உருவானது. அதை சாரு மஜூம்தார் உள்ளிட்ட பல தோழர்கள் முன்னெடுத்தார்கள். மேற்கு வங்கம் நக்ஸல்பாரி கிராமத்தில் உருவான அந்தக் கிளர்ச்சி, இந்தியா முழுக்கப் பரவியது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, கட்சி தொடங்கப்பட்ட புதிதில் நகரம் – கிராமம் என்ற பாகுபாடு இல்லாமல், வெகுசன மக்களைத் திரட்டி நாங்கள் பணி செய்தோம். முதலில் ‘ஒருங்கிணைப்புக் குழு’ என்றுதான் செயல்பட்டோம். அதன் இந்திய அளவிலான பொதுச் செயலாளராக சாரு மஜூம்தாரும், தமிழக ஒருங்கிணைப்பாளராக தோழர் அப்புவும் இருந்தனர்.

1969–ம் ஆண்டில் முறைப்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) என்ற பெயருடன் செயல்பட்டோம். எங்களுக்கு விவசாயிகள், ஆலைத் தொழிலாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பிலும் செல்வாக்கு கிடைத்தது. ஆவடி, அம்பத்தூர் பகுதிகளில் குசேலர், கோதண்டராமன் போன்றோர் தலைமையில் கட்சி பலமாக இருந்தது. பெண்ணாடத்தில் புலவர் கலியபெருமாள் தலைமையிலான தோழர்கள் பிரமிக்கத்தக்க வகையில் கட்சியை வளர்த்தனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் மத்தியில் பெரும் ஆதரவு இருந்தது.

## கூட்டாளி

1969–ம் ஆண்டுக்கு பிறகு, சாரு மஜூம்தார் ‘வர்க்க எதிரிகளை அழித்தொழிப்போம்’ என அறிவித்தார். மக்களுடன் நாங்கள் கொண்டிருந்த உறவை அப்படியே கைவிட்டுவிட்டு, தலைமறைவு இயக்கம் ஆனோம். ‘கொடுமை செய்யும் நிலப்பிரபுகள், கந்துவட்டிக்காரர்கள், ஏழை மக்களை அடிமைகளாகத் துன்புறுத்துவோரைக் கொல்வதன் மூலம் வர்க்க விடுதலையை அடையலாம்’ என்பது அழித்தொழிப்பு அரசியல். ‘நீரை ஆதாரமாகக் கொண்ட மீனைப் போல, மக்களை ஆதாரமாகக் கொண்டு புரட்சியாளர்கள் இருக்க வேண்டும்’ என்றார் மாவோ. ஆனால், நாங்கள் மக்களிடம் இருந்து அந்நியமாகிவிட்டோம். அன்றைக்கு இந்த அழித்தொழிப்புக் கொள்கையை என் போன்றோர் ஏற்கவில்லை. ஆனால் அழித்தொழிப்பு வழிமுறை தவறு என்றால், அதற்கு மாற்றாக இன்னொரு வழிமுறையைச் தோழர்களுக்குச் சொல்ல வேண்டும். அந்தப் பக்குவம் அன்று எங்களிடையே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, விரும்பியோ விரும்பாமலோ அழித்தொழிப்பு நடவடிக்கைகளில் தோழர்கள் ஈடுபட்டார்கள்.

தமிழகம் முழுக்க முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பலர் தலைமறைவு ஆனார்கள். அப்போது அகில இந்திய அளவில் கட்சி 'அறுவடையைக் கைப்பற்றுவோம்' என்ற புதிய கிளர்ச்சியை அறிவித்தது. நிலச்சுவான்தார்களின் விளைந்துகிடக்கும் நிலங்களில் புகுந்து, நெல்லை அறுத்து ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதுதான் 'அறுவடையைக் கைப்பற்றுவோம்' கிளர்ச்சி. பெண்ணாடம், தஞ்சைப் பகுதிகளில் கலிய பெருமாள் உள்பட பல தோழர்கள் இதைச் செய்தார்கள். அப்போது கடுமையான காவல் துறையினர் தொல்லை இருந்தது. 'காவல் துறையிடம் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள ஆயுதம் வேண்டும்' எனத் தீர்மானித்தவர்கள், தோட்டத்தில் வைத்து நாட்டு வெடிகுண்டு செய்ய முயற்சித்தனர். அது தவறுதலாக வெடித்து, மூன்று தோழர்கள் உயிர் இழந்தார்கள். புலவர் கலியபெருமாள் காயங்களோடு தப்பினார். தமிழகம் முழுக்க நடைபெற்ற அழித்தொழிப்பு நடவடிக்கையில், 20–ல் இருந்து 25 நிலபிரபுகள் வரை கொல்லப்பட்டனர்.

ஒரு இடத்தில் வர்க்க எதிரி அழிக்கப்படும்போது, மக்கள் அதைத் தற்காலிகமாகக் கொண்டாடுவார்கள். அதன் பின்னர் காவல் துறையினர் வந்து மக்களைத் துன்புறுத்த ஆரம்பிக்கும். நக்ஸல்பாரி தோழர்களுக்குத் தண்ணீர் கொடுத்தவர்கள், சாப்பாடு போட்டவர்கள் என அத்தனை பேரையும் சித்ரவதை செய்தது காவல் துறை. இதனால் நாங்கள் மீண்டும் அந்த மக்களிடம் செல்ல முடியவில்லை. காவல் துறையிக்குப் பயந்து மக்களும் எங்களிடம் இருந்து அந்நியப்பட ஆரம்பித்தனர். இன்னொரு பக்கம் காவல் துறையின் கண்காணிப்பும் நெருக்குதலும் அதிகரித்தன.

அதே காலகட்டத்தில் திருப்பத்தூரில் சில தோழர்களைக் கைது செய்த காவல் துறையினர், அவர்களை ஜீப்பில் வைத்து அழைத்துச் செல்லும்போது எதிர்பாராதவிதமாக குண்டு வெடித்ததில், ஐந்து பேர் மரணமடைந்தனர். இதுவும் தமிழகத்தில் கொந்தளிப்பை உருவாக்க, நக்ஸல்பாரிகள் மீதான வேட்டை தொடங்கியது. நாங்கள் வேட்டையாடப்பட்டோம்' என இடைவெளி விடும் கோவை ஈஸ்வரன், சிறிய மௌனத்துக்குப் பிறகு பேச ஆரம்பிக்கிறார்.




''நக்ஸல்பாரிகள் மீதான அழித்தொழிப்பின் முதல் பலியே எங்கள் தோழர் அப்புதான். அவர், கோவை கோட்டைமேடு பகுதியில் பிறந்தவர். அடிப்படையில் கல்வி அறிவற்ற அவர், தானாகப் படித்து ஆங்கிலமும் கற்று ஏழைகளுக்குக் கல்வி புகட்டினார். சாதி வெறியர்களுக்கு எதிராகவும், கந்துவட்டிக் கொடுமைகளுக்கு எதிராகவும் போராடியதால், அவருக்கு மக்களிடையே பெரும் செல்வாக்கு இருந்தது. நக்ஸல்பாரி அமைப்புக்கு வந்த பிறகு அழித்தொழிப்பு நடவடிக்கைகள் சிலவற்றில் ஈடுபட்டதற்காக, அவரை காவல் துறையினர் தேடியது. 1970–ம் ஆண்டில் கல்கத்தாவில் நடைபெற இருந்த கட்சியின் மையக் குழுக் கூட்டத்துக்குச் செல்ல வேறு ஒரு பெயரில் ரயில் பயணச்சீட்டு எடுத்துவிட்டு, தான் தங்கியிருந்த வேலூர் விடுதிக்குச் சென்றார். அங்கிருந்த ஒரு காவல் துறை உளவாளி 'அவர்தான் அப்பு' என்பதை உறுதிசெய்து, காவல் துறைக்குத் தகவல் சொல்லிவிட்டார். விடுதி அறையில் இருந்த அப்புவை போலீஸ் பிடித்துச் சென்றுவிட்டது. அதன் பின்னர் தோழர் அப்புவின் உடலை இன்று வரை எவருமே பார்க்கவில்லை. அன்றில் இருந்து இப்போது வரை, அவர் அரசு ஆவணங்களில் தேடப்படும் குற்றவாளிதான்.

அப்புவுக்கு அடுத்து சீராளன் என்னும் தோழரை அடித்தே கொன்றார்கள். சீலையம்பட்டியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த பாலனை அழைத்துச் சென்றவர்கள், அவரை அடித்து முக்கால் பிணமாக்கி அரசு மருத்துவமனையில் சேர்த்த பின், அவர் அங்கு இறக்கிறார். அதன் பின்னர் போலீஸார் அவருடைய சாம்பலைத்தான் கொடுத்தார்கள்.

தேவாரம் தலைமையிலான காவல் துறை நடத்திய வேட்டையில், சுமார் 30–க்கும் மேற்பட்ட நக்ஸல்பாரி இளைஞர்கள் கொல்லப்பட்டனர். மேற்கு வங்கத்தில் சாரு மஜூம்தாரும் கொல்லப்பட, எங்கள் இயக்கம் பின்னடைவைச் சந்தித்தது. 1975–க்குப் பிறகு, கட்சி மூன்றாகப் பிளவுபட்டது. அந்தப் பின்னடைவில் இருந்து பாடம் கற்றுக் கொண்டவர்கள், புதிய அரசியல் பாணியில் இன்றும் மக்களோடு பயணிக்கிறார்கள்.

அப்பு காணாமல் போனது தொடர்பாக, காதர் கமிஷனை அப்போது அமைத்தது தமிழக அரசு. ஆனால், காவல் துறைக்குப் பயந்து எவரும் சாட்சியம் சொல்ல முன்வரவில்லை. அப்பு காணாமல் போனவராகவே, காதர் கமிஷனால் அறிவிக்கப்பட்டார். சீராளன் கொல்லப்பட்டது தொடர்பாக ஆர்.டி.ஓ விசாரணை மேற்கொண்டதில், சீராளனை காவல் துறை கொன்றது உறுதியானது. இதனால், சீராளன் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கப்பட்டது.

1970–ம் ஆண்டுக்குப் பிறகு கூட, ரவீந்திரன், சிவா என்கிற பார்த்திபன், நவீன் பிரசாத் என, தோழர்கள் தொடர்ந்து கொல்லப்பட்டனர். அந்தக் காலத்தில் அமைப்பில் இருந்து செயல்பட்டவர்கள் இன்றும் வழக்கு, வாய்தா என அலைகிறார்கள். சாரு மஜூம்தாரை அழித்துவிட்டால் நக்ஸல்பாரி இயக்கம் அழிந்துவிடும் என்றார்கள். ஆனால், இன்றும் மத்திய இந்தியாவின் காடுகளில் பரந்து விரிந்திருக்கும் மாவோயிஸ்ட் இயக்கத்தை, 'சிவப்புத் தாழ்வாரம்' என அடையாளப்படுத்துகிறார்கள்.

பல முரண்பாடுகள் இருந்தாலும், முதலில் அப்பு–பாலனுக்கு செவ்வணக்கம் சொல்லிவிட்டுத்தான், தன் (கம்யூனிஸ்ட்) கட்சி வேலைகள் தொடங்கப்படுகின்றன. ஆண்டுகள் பல ஓடிவிட்டன. அன்று 'துப்பாக்கிக் குழாயில் இருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது' என்ற மாவோவின் கோட்பாட்டை முன்வைத்தோம். இன்று 'மக்கள் திரள் போராட்டங்கள் மூலமே புரட்சியைச் சாதிக்க முடியும்' என நம்புகிறோம். 70–களில் நாம் பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களுக்கும் இன்றைய கிராமங்களுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. பெரிய நில உடைமையாளர்களே சுயமாக விவசாயம் செய்ய முடியவில்லை. நிலம், மக்களிடம் இருந்து அந்நியமாகிவிட்டது. முன்னர் விதர்பாவில் மட்டுமே நடந்த விவசாயிகள் தற்கொலை, இப்போது நாடு முழுக்க விரிவடைந்திருக்கிறது. 'தற்கொலைக்கு எதிராக வழக்குப் பதிய வேண்டாம்' என்பதுபோன்ற சட்டத்தை மத்திய அரசு கொண்டுவர விரும்புவதின் நோக்கமும் இதுதான்.

தமிழகத்துக்கே உணவு அளித்த தஞ்சையில் கூட, வயலுக்கு தெளிக்கும் பூச்சி மருந்தைக் குடித்து தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. இன்னொரு பக்கம், கிராமப்புற மக்களை கூலி அடிமைகளைப் போல நடத்துகின்றன பன்னாட்டு நிறுவனங்கள். பன்னாட்டு மூலதனக் குவிப்பாலும், அதன் தொழில் முறைகளாலும் புதிய மத்திய தரவர்க்கம் ஒன்று உருவாகியிருக்கும் அதே வேளையில், ஏழ்மையும் வேலை இழப்பும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. 'இந்த மக்களின் பிரச்னைகளுக்காகப் போராடுகிறவர்கள் யார்?' என்பதே இப்போதுள்ள கேள்வி. இந்தக் கேள்விகளில் இருந்துதான் அதற்கான பதிலும் கிடைக்கிறது. அந்தப் பதிலில் நாங்கள் ஒரு சிறு துளியாக இருப்போம்!"

**(2015ஆம் ஆண்டு ஆனந்த விகடனில் வெளியான கட்டுரை)**

9ம் பக்கத்தொடர்ச்சி...

கம்யூனிஸ்ட் அகிலத்திற்கு ஒரு பெரும் தாக்கமும் நஸ்டமுமாகும். இவற்றினால் கார்த்திகேசன் மிகவும் மனமுடைந்தேயிருந்தார். எவ்வாறிருப்பினும் அவர் இறக்கும் வரை பல்வேறு கட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தோருடன் தொடர்புகளை வைத்திருந்ததோடு, அவர்களின் சுகதுக்கங்களில் கலந்து கொள்வதை பழக்கமும் வழக்கமுமாகக் கொண்டிருந்தார். இவர்களில் அவருக்குப் பின்னர் காலஞ்சென்ற வீ.ஏ.கந்தசாமி, டாக்டர் சு.வே.சீனிவாசகம், கே.டானியல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். வீ.ஏ.க்தசாமி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலெல்லாம், அவர் மீது அன்புகாட்டி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று பணிவிடை செய்வார். இவ்விருவருடன் நானும் கூடிச்செல்வது வழக்கம்.

**கார்த்திகேசனும் நானும்**

1952ல் நான் யாழ் மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். ஒருநாள் மெல்லிய, சுதேச உடையுடன் சால்வை அணிந்த ஒருவர் எமது பௌதீக ஆய்வுகூடத்தில் முற்போக்கு எண்ணங்கொண்ட ஏ.ஈ.தம்பர் ஆசிரியருடனும், கம்யூனிஸ்ட் அபிமானியான எஸ்.மகாலிங்கத்துடனும் அதிக நேரமிருந்து பேசிக்கொண்டிருந்தபோது, வகுப்பில் அமைதி குலைந்து சத்தமேற்பட்டது. பின்பு அந்த மனிதர் சென்றுவிட்டார். தம்பர் எம்மைக் கடிந்துவிட்டு ஆங்கிலத்தில் "உங்களுக்கு அவரைத் தெரியுமா? அவர்தான் கார்த்திகேசன்" என்று கூறினார். அன்றுதான் நான் அவரை முதல் முறையாகப் பார்த்தது. அந்த வகுப்பில் அவரது சகோதரி செல்வி முருகுப்பிள்ளையும் படித்தது எனது ஞாபகம். பின்னர் அதே ஆண்டு ஆகஸ்ட் ஹர்த்தால் வெற்றிக் கூட்டத்தில் கார்த்திகேசனின் பேச்சுக்கு கைதட்டினேன். பின்பு ஒருமுறை நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அண்மையிலமைந்திருந்த இராமசாமி ஐயரின் புத்தகசாலையில் "மக்கள் கொரியாவுக்கு ஜே" என்றொரு புத்தகத்தை நான் வாங்கியபோது, என்னுடன் பேசினார். சில நிமிட நேரம் கதைத்துவிட்டு நான் கல்லூரி விடுதிக்குச் சென்றுவிட்டேன். அந்தக் காலத்தே மத்திய கல்லூரி விடுதிச்சாலை மாணவர்ளாகிய நாம் ஓர் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டோம். நாம் நடாத்திய வேலைநிறுத்தக் கூட்டத்தில் கார்த்திகேசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அன்று அவருடன் பேசும் வாய்ப்புக் கிட்டியது. பின்னர் 1956ல் பொன்.கந்தையா அவர்களின் தேர்தல் பிரச்சாரத்திற்காக நெல்லியடிக்கு அடிக்கடி வருவார். அப்போதும் அவருடன் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு, நண்பர்களாகவும் தோழர்களாகவும் பரிணமித்துவிட்டோம். 1956க்குப் பின் காலஞ்சென்ற கரவைக் கந்தசாமியும் நானுமாக ஆரம்பித்த வடமராட்சி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்துக்கு அடிக்கடி வருகை தந்து, அரசியல் வகுப்புகளை நடாத்தி, எண்ணற்ற வாலிபர்களை கம்யூனிஸ்ட் வாலிபர்களாக மாற்றி வெற்றி கண்டார். இவ்வாறு அவர் மீது எனக்கு ஏற்பட்ட பாசமும், நேசமும், தோழமையும் கலந்த நட்பு அவர் இறக்கும் வரை தொடர்ந்திருந்தது.

வருடத்தின் யூன் 25ம் திகதி எனக்கும் கார்த்திகேசனுக்கும் ஒரு சிறந்த நாள். மகிழ்ச்சியான நாள். அதுதான்அவரது பிறந்த நாள். எனது மகன் மகிந்தனின் பிறந்த நாளும்கூட. நான் நல்லூரில் வசித்த நாட்களில் மகனின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வருகை தந்து, தனது பிறந்த நாளையும் கொண்டாடி மகிழ்ந்து, தனது நகைச்சுவை ததும்பும் பேச்சினால் அங்கு வந்த அனைவரையும், எனது குடும்பத்தினரையும் மகிழ்ச்சியில் குதூகலிக்க வைத்துச் செல்வார். இந்தப் பசுமையான நினைவுகள் என் மனதைவிட்டு என்றும் அகலாதவை.

கார்த்திகேசன் மறைந்து 25 ஆண்டுகள் கழிந்திருக்கும் இவ்வேளையில் மார்க்சிசவாதிகளான எமக்கு அவரது வாழ்க்கை ஒரு முன்னோடி உதாரணமாகும். மார்க்சிச தத்துவம் என்றும் அழியாதது. மனிதகுலமிருக்கும் வரை நிலைத்திருக்கும். கார்த்திகேசன் மார்க்சிசத்திற்கு அளித்த பங்களிப்பு என்றும் இலங்கையிலுள்ள தற்தோதைய, வருங்காலத்தைய மார்க்சிஸ்டுகளால் நினைவுகூரப்படும்.

(**தோழர் மு.குமாரசாமி** கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நீண்டகாலச் செயற்பாட்டாளர் ஆவார். ஆசிரியராகப் பணிபுரிந்த அவர், ஆசிரிய தொழிற்சங்கத்திலும் முக்கிய பொறுப்புகளை வகித்தவராவார். 2016இல் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அவர் எழுதிய இக்கட்டுரை தோழர் கார்த்திகேசன் அவர்களின் மறைவின் 25ஆவது நினைவு தினத்தையொட்டி அவரது புதல்விகளில் ஒருவரான திருமதி ஜானகி பாலகிருஸ்ணன் அவர்கள் தொகுத்து வெளியிட்ட **'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்'** என்ற நாலிலிருந்து நன்றியுடன் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா இன்று!

வரலாற்றில் முதல்முறையாக 'இன் தி நேம் ஆஃப் பீப்பிள்' (In the name of people) என்னும் சீனத்தொடர், நெட்ஃபிளிக்ஸ் (Netflix) சீரியல்களுக்குப் போட்டியாக உலகை ஆண்டுகொண்டிருக்கிறது. டிகிடிதூடி என்னும் இணையச் சேவையில் 55 எபிசோடுகள் வெளிவந்த இத்தொடரை 55 பில்லியன் பேர் இதுவரை கண்டுகளித்திருக்கிறார்கள்.

சீனாவின் சாதனைகளையும் சறுக்கல்களையும் மதிப்பிட ஒரேவழி, திறந்த மனதுடன் அந்நாட்டை அணுகுவதுதான். "ஒரே ஒருமுறை சீனா சென்று திரும்பினால் போதும், அந்நாடு குறித்து மீடியாவில் வரும் பெரும்பாலான செய்திகள் பிழையானவை என்பது உங்களுக்குத் தெரிந்துவிடும்" என்கிறார் ஸ்காட் யங் என்னும் அமெரிக்க இளைஞர். "சீனா பகுதியளவில் சுற்றுச்சூழல் மாசால் சீர்கெட்டிருப்பது உண்மை. ஆம், என்னால் அங்கே ஃபேஸ்புக் பார்க்க முடியவில்லை. ஆம், சீனமொழி கற்பதற்குக் கடினமானது. ஆனால் பல பகுதிகளில் சுத்தமான காற்றை நான் சுவாசித்தேன், இணையத்தை உபயோகித்தேன், மண்டரின் ஓரளவு கற்றுக் கொண்டேன். சீனர்களுக்கு வெளிநாட்டினரைப் பிடிக்காது என்று எச்சரித்து அனுப்பினார்கள். நான் போன முதல் நாளே நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டேன். சீனாவில் சுதந்திரமாக இருக்க முடியாது என்றார்கள். நான் மூன்றுமாத காலம் சீனாவை அச்சமின்றிச் சுற்றி வந்தேன். சீனர்கள் வெளிப்படையாக இருக்கமாட்டார்கள் என்றார்கள். கம்யூனிசம் குறித்து என்னால் சீனர்களுடன் விவாதிக்க முடிந்தது. மொத்தத்தில் நான் தெரிந்து கொண்டது ஒன்றுதான். சீனா பற்றிச் சொல்லப்படுவது அனைத்தும் அரை உண்மை அல்லது முழுப்பொய்."

சீனாவின் பாய்ச்சல்கள் மறுக்க முடியாதவை. அமெரிக்காவோடு நேருக்குநேர் நின்று போட்டிபோடும் பொருளாதார ஆற்றலைக் கொண்டிருக்கும் ஒரே நாடு சீனா



மட்டுமே என்பதை அந்நாட்டை விரும்புபவர்கள் மட்டுமல்ல, வெறுப்பவர்களும் கூட ஒப்புக்கொள்கிறார்கள். ஒரு சராசரி சீனரின் சொத்து 2006~ல் இருந்ததைவிட 2016~ல் இரண்டு மடங்காகப் பெருகியுள்ளது. சீன அரசின் முனைப்பான திட்டங்களே இதற்கு முழுமுதல் காரணம். போகிறபோக்கில் எந்தவொரு திட்டத்தையும் அங்கே அரசியல்வாதிகள் அறிவிப்பதில்லை. அறிவித்து முடித்த கையோடு எந்தவொரு திட்டத்தையும் அவர்கள் மறந்துவிடுவதும் இல்லை. எத்தனை கடினமானதாக இருந்தாலும் சரி, அறிவித்த திட்டத்தை நிறைவேற்றி முடித்தபிறகே மறுவேலை பார்க்கிறார்கள். ஓர் உதாரணம்...சீனாவின் பொருளாதாரக் கட்டுமானத்தையும் அந்நாட்டின் வருமான புள்ளிவிபரங்களையும் ஆராய்ந்த நிபுணர்கள், சீனாவின் பலம் அதிகரிக்க வேண்டுமானால் உற்பத்தித் துறையிலிருந்து சேவைகள் துறைக்கு நாட்டை நகர்த்திச் சென்றாக வேண்டும் என்றொரு கருத்தைச் சொன்னார்கள்.

சரி...எதிர்காலம் என ஒன்று வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிடாமல் உடனே அந்தக் கருத்தை அள்ளியெடுத்துக் கொண்டு செயல்பட அரம்பித்துவிட்டது சீன அரசு. இன்று சீனா குறிப்பிடத்தக்க அளவுக்குச் சேவைகள் துறை பக்கம் நகர்ந்து வந்துவிட்டது. அதுமட்டுமின்றி, அத்துறையில் சாதனையும் படைத்திருக்கிறது. மற்ற நாடுகளைப்போல் அல்லாமல், சீனா தன் காதுகளையும் கண்களையும் எப்போதும் திறந்து வைத்திருப்பதால் மட்டுமே இந்தச் சாதனை சாத்தியமாகியிருக்கிறது.

சமீப காலமாக சீனாவில் எழுதப்பட்டுவரும் அறிவியல் புனைகதைகளை உலகம் ஆர்வத்துடன் வாசிக்கிறது. முழுக்கச் சொந்தத் தயாரிப்பில் ஒரு பெரிய பயணிகள் விமானத்தை (சி919) உருவாக்கிவிட்டது சீனா. மற்றொரு பக்கம் விண்வெளி ஆய்வுகளிலும் செயற்கை அறிவாற்றல் துறையிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

**மருதன்**

மருத்துவம், சுகாதாரம் இரு துறைகளிலும் திருப்திகரமான மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது சீனா. ஐந்து வயதைத் தொடுவதற்குள் இறந்துபோகும் சீனக் குழந்தைகளின் எண்ணிக்கை 2006 வாக்கில் 2.19 சதவிகிதமாக இருந்தது. பத்தாண்டுகளில் இந்த எண்ணிக்கை பாதியாகிவிட்டது.

சீனர்களில் கிட்டத்தட்ட சரி பாதியினர் இன்று மொபைல் மூலம் இணையத்தைப் பாவிக்கிறார்கள். பத்தாண்டுகளுக்கு முன்பு, மூவரில் ஒருவரிடம் மட்டுமே மொபைல் இருந்தது. பத்துபேரில் ஒருவர் மட்டுமே இணையத்தை உபயோகித்து வந்தனர். சென்றவாரம் வந்த ஓர் அறிவிப்பு இது, 'நாம் ஏன் விக்கிப்பீடியாவைச் சார்ந்திருக்க வேண்டும்? நமக்கான விக்கிப்பீடியாவை நாமே உருவாக்கிக் கொள்வோம், வாருங்கள்' அநேகமாக இன்னும் சில மாதங்களில் இந்த வேலை முடிந்துவிட்டிருக்கும்.

தங்களால் எதையும் சாதிக்கமுடியும் என்று சீனர்கள் நம்புகிறார்கள். தங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிபெற்ற தேசமாக அவர்கள் கனவு காண்கிறார்கள். கொடூரமான வரட்சிகளையும் ஏழ்மைகளையும் அந்நிய ஆக்கிரமிப்புகளையும் முறியடித்து, கடும் தியாகங்கள் புரிந்து, ஈட்டிய கடந்தகால வெற்றிகளை அவர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். எந்த இடர்ப்பாட்டையும் தாண்டிச்செல்ல முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

''நான் ஒருவேளை செல்வந்தராக இருந்தால், இந்தியாவில் பிறக்கவே விரும்புவேன். இங்கே என்னால் தொல்லையின்றி நிம்மதியாக வாழ முடியும். அரசு என் வாழ்வில் குறுக்கடுமா, என் சொத்துக்களை அபகரித்துக் கொள்ளுமா என்றெல்லாம் நான் அஞ்சவேண்டியதில்லை. என் அனுமதியின்றி என்னிடம் எதுவும் பறிக்கப்படமாட்டாது. ஆனால், ஏழையாக இருக்க வேண்டுமானால், நான் சீனாவில் பிறக்கவே விரும்புவேன். அங்கே என் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். உணவு, இருப்பிடம், கல்வி, மருத்துவம், சுகாதாரம் எதைப்பற்றியும் நான் கவலைப்பட வேண்டியதில்லை. ஜனநாயகம் பற்றியெல்லாம் அநாவசியமாகக் கவலைப்படாமல் நிம்மதியாக என் வாழ்வை நடத்தலாம்'' என்பது சீனாவில் பல காலம் வாழ்ந்த இந்திய பத்திரிகையாளர் ஒருவரின் கருத்து.

உண்மைதானே!

(இக்கட்டுரை 'கல்கி' வார இதழில் மருதன் என்பவர் எழுதிய கட்டுரையின் முக்கிய பகுதிகளாகும் - நன்றி: கல்கி)

# இவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தார்கள்

## திருமதி சின்னம்மா கருணாநிதி (சின்னம்மா அக்கா)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சியில வாழ்ந்து வந்தவருமான ''சின்னம்மா அக்கா'' என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டு வந்த திருமதி சின்னம்மா கருணாநிதி, ஒரு விபத்து காரணமாக 02-08-2017 அன்று கிளிநொச்சியில் அகால மரணம் அடைந்தார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சின்னம்மா அக்கா, நெடுந்தீவு முற்போக்கு முற்போக்கு வாலிபர் இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு எப்போதும் அனுசரணையாகச் செயற்பட்டதுடன், நெடுந்தீவு பெண்களை முற்போக்கு அரசியல் அணியில் திரட்டுவதிலும் முனைப்பாகச் செயற்பட்ட ஒருவராவார். அவரது இழப்பு முற்போக்கு சக்திகளுக்கு ஒரு பேரிழப்பாகும்.

## தோழர் ''கண்டி''

மலையகத்தைச் சேர்ந்தவரும், 50 ஆண்டுகளுக்கும் மேலாக பரந்தன் பூங்காவனம் சந்திப் பகுதியில் வாழ்ந்து வந்தவருமான ''கண்டி'' என அழைக்கப்படும் விவசாயத் தொழிலாளத் தோழர் அண்மையில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர் கண்டி 60களிலும், 70களிலும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் முனைப்பாகச் செயற்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்துடன் இணைந்து செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கவிஞர் ஏ.இக்பால்

அக்கரைப்பற்றை பிறப்பிடமாகக் கொண்டவரும், நீண்டகாலமாக தர்கா நகரில் வாழ்ந்து வந்தவரும், முற்போக்குக் கவிஞரும் முன்னாள் ஆசிரியருமான ஏ.இக்பால் அண்மையில் காலமானார்.

ஏராளமான கவிதைகளையும், இலக்கியக் கட்டுரைகளையும் எழுதியுள்ள இக்பால், ஒரு சிறந்த பேச்சாளருமாவார். தனது இலக்கிய வாழ்வை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து ஆரம்பித்த இக்கால், இறுதிக்காலத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைப் பிரதீடு செய்த இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டார்.

---

**இவர்கள் அனைவருக்கும் 'வானவில்' சார்பாக எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், இவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பங்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.**

**-ஆசிரியர் குழு**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

இற்றைவரை நிறைவேற்றவில்லை.

அதுமட்டுமின்றி, முன்னைய அரசால் தொடங்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. விலைவாசி கட்டுக்கடங்காமல் எகிறிச் செல்வதைக் காண முடிகிறது. பணவீக்கம் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. நாட்டில் எந்தத் திசையை நோக்கினாலும் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும், உண்ணாவிரதப் போராட்டங்களும் நடைபெற்றவண்ணம் உள்ளன.

இன்னொரு பக்கத்தில் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள் அரசைக் கொண்டு நடாத்த முடியாத அளவுக்கு வலுத்துச் செல்கின்றது.

ஆனால் அரசாங்கமோ இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வுகாண முடியாத கையறு நிலையில், எல்லாப் பிரச்சினைகளுக்கும் முன்னைய அரசாங்கத்தில் பழியைப் போட்டுத் தப்பிக்க முயல்கிறது. அத்துடன் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, முன்னாள் ஜனாதிபதியின் குடும்பத்தினரையும், தமது அரசாங்கத்துடன் இணையாமல் நாட்டுப்பற்றுடன் உறுதியாக நிற்கும் முன்னைய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களையும் பழிவாங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்துடன் அவர்கள் மீது எண்ணற்ற குற்றச்சட்டுகளைச் சுமத்தி, அவர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளுக்கும், நீதிமன்ற விசாரணைகளுக்கும் அழைத்து அலைக்கழிக்கின்றது.

அத்துடன் இந்த ஆரவாரத்தில் சத்தம் சந்தடியின்றி நாட்டின் முக்கியமான வளங்களை இந்தியா, சீனா மற்றும் மேற்கு நாடுகளுக்கு தாரைவார்த்து வருகின்றது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் மெற்கொண்ட அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான

இராஜாங்க அமைச்சர், ''இலங்கை ஜனாதிபதி ட்ரம்ப்பின் மூலோபாயத் திட்டத்தில் முக்கியமான நாடாக இருக்கின்றது'' எனத் தெரிவித்ததின் மூலம், நமது நாட்டை மைத்திரி – ரணில் கூட்டு எத்திசையை நோக்கி இழுத்துச் செல்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.
இவையெல்லாம் ஒருபுறமிருக்க, ஊழல் மோசடிகள் அற்ற 'நல்லாட்சி' நடாத்தப் போவதாகச் சொன்ன இந்த அரசாங்கத்தில்தான், முனனொருபோதும் இலங்கையில் நிகழாத அளவுக்கு ஊழலும் மோசடிகளும் நடைபெற்றுள்ளன. இந்த மோசடிகளை அரசாங்கமே நியமித்த விசாரணைக் குழுக்கள் அம்பலப்படுத்தியுள்ளன.

முக்கியமாக மத்திய வங்கி ஆளுநராக பதவி வகித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவான அர்ஜூனா மகேந்திரன் பிணைமுறி ஊடாக மேற்கொண்ட பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா மோசடியை 'கோப்' விசாரணை முடிவும், ஜனாதிபதி ஆணைக்குழுவும் அம்பலத்துக்குக் கொணடு வந்தும் இன்றுவரை அதில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரதமர் ரணிலுக்கும் இந்த மோசடியில் தொடர்பு இருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தும், அவர் பதவி விலகாமல் பதவியில் அழுங்குப்பிடியாக பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கிறார்.

இந்த விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட முக்கிய புள்ளியான ஐ.தே.கவைச் சேர்ந்த முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணநாயக்க, மோசடி அம்பலமானதால் பதவி விலக வேண்டி வந்தது. அப்படிப் பதவி விலகியவருக்கு எதிராக நீதித்துறையின் ஊடாகவும், தனது கட்சி அடிப்படையிலும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய பிரதமர் ரணில், அதைவிடுத்து அவரது 'முன்மாதிரி'யைப் புகழ்ந்து, அவர் மீதான குற்றக்கறையைக் கழுவ முயற்சிக்கிறார்.

இதில் முக்கியமான விடயமென்னவென்றால், சில நாட்களுக்கு முன்னர்தான் வெளிவிவகார அமைச்சராக இருந்த இன்னெரு ஐ.தே.க. முக்கிய புள்ளியான மங்கள சமரவீரவை அவரது சேவை திருப்தி இல்லாததால் வெளிவிவகார அமைச்சுப் பதவியிலிருந்து மாற்றி அப்பதவி ரவி கருணநாயக்கவுக்கு வழங்கப்பட்டதுடன், ரவி கருணநாயக்க வகித்துவந்த நிதியமைச்சர் பதவி மங்கள சமரவீரவுக்கு வழங்கப்பட்டது.

உண்மையில் இந்த அமைச்சு மாற்றங்கள் கண்துடைப்புக்காகவே நடாத்தப்பட்டது. இது நடைபெறுவதற்கு முதல், அமைச்சரவையில் பல அமைச்சர்கள் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள் என ஜனாதிபதி கருதுவதால், முழுமையானதொரு அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி மேற்கொள்ளப் போகிறார் என ஊடகங்களில் பெரிதாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்தது' போல, இந்த இரண்டு அமைச்சுகளும்தான் மாற்றப்பட்டது. ஆனால் இந்த மாற்றம் நடந்து சிறிது நாட்களிலேயே ரவி கருணநாயக்க பதவியை இழக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுவிட்டது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், நமது நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஊழல் மோசடியில் ஈடுபட்டு, பதவி விலகி, முழு உலகமும் எம்மைப் பார்த்து நகைக்கையில், முன்னர் சில தவறுகளுக்காக இதே அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து பதவி விலக வைக்கப்பட்ட இன்னொரு முன்னாள் அமைச்சரான ஐ.தே.க.

புள்ளி திலக் மாரப்பன புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படியானால், முன்னர் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் காலாவதியாகிவிட்டனவா?
அதுமட்டுமின்றி, இன்று குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி பதவி விலகி இருக்கும் ரவி கருணநாயக்கவுக்கும் எதிர்காலத்தில் திரும்பவும் ஏதாவதொரு அமைச்சுப் பதவி வழங்கப்படுமா?

இது ஒருபுறமிருக்க, கொழும்பிலுள்ள 'சைற்றம்' என்னும் தனியார் மருத்துவக் கல்லூரியை மூடிவிடும்படி மாணவர்கள், ஆசியர்கள், வைத்தியர்கள், பெற்றோர்கள் என முழுநாடும் திரண்டு நின்று போராடுகையில், சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன என்ற தனி நபருக்காக அதை மூடாது அரசாங்கம் அழுங்குத்தனமாக நிற்கிறது.

'நல்லாட்சி' என்றால் மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளிக்கவல்லவா வேண்டும். ஆனால் இந்த அரசு 'நல்லாட்சி' என்ற பெயரில் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளைத்தான் தொடர்ந்து செய்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

இவை மட்டுமின்றி, தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட இனப் பிரச்சினைத் தீர்வு, காணாமல் போனோர் விவகாரம், இராணுவம் வசமுள்ள காணிகளை விடுவித்தல், தமிழ் கைதிகள் விவகாரம் போன்ற பிரச்சினைகளிலும் அரசாங்கம் இதுவரை உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் செய்யவில்லை.

மறுபக்கத்தில் மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களையும் உரிய காலத்தில் நடாத்தாது இழுத்தடிக்கின்றது.


அரசாங்கத்தின் இந்த மக்கள் விரோத, தேசத்துரோக நடவடிக்கைகளை அதிகமான ஊடகங்கள் விமர்ச்சித்து எழுத ஆரம்பித்திருப்பதால், ஜனாதிபதியும் பிரதமரும் இப்பொழுது, தாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பெரிதாகப் பேசி வந்த ஊடக சுதந்திரம் பற்றிய கதைகளை மறந்து, ஊடகங்கள் மீது ஏறிப்பாய ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த விடயங்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கையில், மைத்திரி – ரணில் அரசு நாட்டை ஆட்சி செய்யும் தகுதியை இழந்துவிட்டது என்பது தெளிவாகின்றது. இதற்கு ஒரே பரிகாரம் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தி, மக்கள் ஆதரவு பெற்ற அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வழிவகை செய்யும்படி அரசைக் கோரி மக்கள் இயக்கம் ஒன்றை முன்னெடுப்பதுதான். ஏனெனில் மக்கள் கிளர்ச்சி ஒன்றின் மூலம் மட்டுமே இந்த அரசாங்கத்தை ஒருவழிக்குக் கொண்டுவர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை பார்த்த குருடர்கள்!




அண்மையில் வடமராட்சி கிழக்கில் உடுத்துறைக்கு அருகிலிருக்கும் வத்திராயன் பகுதியில் காட்டு யானை தாக்கி 50 வயது குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். அவருடன் கூடச் சென்ற இருவர் யானையால் தாக்குண்டு பலத்த காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். இந்த மூவரும் விறகு பொறுக்கச் சென்ற வேளையிலேயே எதிர்பாராத விதமாக இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

பொதுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் யானைகள் எதுவும் கிடையாது. இந்த யானை வழி தவறி விசுவமடு காட்டுப் பகுதியிலிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மாரி காலத்தில் பெய்யும் கனமழை காரணமாக ஆனையிறவு வரை நீண்டிருக்கும் யாழ்ப்பாணக் கடலேரி ஆனையிறவுக்குக் கிழக்கே உள்ள சுண்டிக்குளம் பகுதியில் உள்ள பெருங்கடலுடன் தொடுத்துவிடும். அந்த நேரத்தில் மனிதர்களும் சரி, மிருகங்களும் சரி, ஏரியைக் கடந்து வடமராட்சி கிழக்கு வரை நீண்டிருக்கும் யாழ்.குடாநாட்டுக்குள் வர முடியாது.

ஆனால் மாரி முடிந்து கோடை ஆரம்பமாகி, கோடை மழையும் பொய்த்து, கடும் வரட்சி ஏற்படும் ஆனி, ஆவணி மாதங்களில் யாழ்.கடலேரி வற்றி பெருங்கடலுடன் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டு, கடலேரி பின்வாங்கிவிடும். அந்த நேரத்தில் கடலேரிக்கும் பெருங்கடலுக்கும் இடையில் உள்ள ஒரு சிறிய பிரதேசம் மணல் நிறைந்து காணப்படும்.

''பூனைத்தொடுவாய்'' என்று அழைக்கப்படும் அந்த இடத்தால் மனிதர்கள் நடந்து செல்வது வழமை. அதுமட்டுமல்லாமல், முன்னைய காலங்களில் வன்னியிலிருந்து களவாக மரங்கள் தறித்து வருபவர்கள் ஆனையிறவுத் தடை முகாமில் காவல் இருக்கும் பொலிசாரினதும் காட்டிலாகா அதிகாரிகளினதும் பிடியிலிருந்து தப்புவதற்காக இந்தப் பாதையைப் பயன்படுத்தித்தான் யாழ்.குடாநாட்டுக்குள் கள்ள மரங்கயையும் விறகையும் கொண்டு வருவது வழமை.

### பச்சிலைப்பள்ளியான்

அதுமாத்திரமின்றி, வல்வெட்டித்துறை கள்ளக் கடத்தல்காரர்கள் கொடிகட்டிப் பறந்த காலத்தில், இந்தப் பாதையின் ஊடாகவே இந்தியாவில் இருந்து கடத்தி வரப்படும் அபினையும், புடவை வகைகளையும் தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று வியாபாரம் செய்வது வழமை. இதற்காகவே அவர்கள் இயக்கச்சியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஏராளமான காணிகளை வாங்கி தென்னம் தோட்டங்களை உருவாக்கி வைத்திருந்தனர். அந்தத் தென்னம் தோட்டங்கள் நீண்டகாலம் கடத்தல்காரர்களின் தங்குமடங்களாகப் பயன்பட்டு வந்தன.

தற்பொழுது இந்தப் பிரதேசத்தில் மழை பெய்யாமல் கடும் வரட்சி நிலவுவதால், அந்தப் பூனைத் தொடுவாய் மூலம் இந்தக் காட்டு யானை வழி தவறி வந்திருக்கக் கூடிய சாத்தியக்கூறு நிறைய உண்டு.

ஆனால், எதேச்சையாக நடந்த இந்தச் சம்பவம் புலிகளின் புகழ்பாடும் 'தமிழ் நெற்' (tamilnet.com) றின் காமாலைக் கண்களுக்கு வேறு விதமாகப் பட்டிருக்கிறது. எடுத்ததிற்கெல்லாம் சிங்கள எதிர்ப்பு இனவாதம் கக்கும் இந்த இணையத்தளம், இந்த காட்டு யானையால் ஏற்பட்ட அசம்பாவிதத்திற்கு விசமத்தனமான கதையொன்றைச் சோடித்துச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதாவது, 2009இல் புலிகளுடனான போர் முடிவடைவதற்கு முன்பு தமிழ் மக்கள் அதிகமாக வாழும் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் யானைகள் இல்லையென்றும், போர் முடிவடைந்து அப்பிரதேசங்கள் முழுமையாக அரச கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் 'சிங்கள அரசாங்கம்' தமிழர்களை அழிப்பதற்காக திட்டமிட்ட முறையில் தென்னிலங்கையிலிருந்து யானைகளை வடக்கு கிழக்கிற்கு கொண்டு வந்து விட்டுள்ளது என்றும், அந்த யானைகள் பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்து வருகின்றன எனவும், 'தமிழ் நெற்' அப்பட்டமான புளுகுக் கதையொன்றை அவிழ்த்து விட்டுள்ளது.

யுத்தம் முடிவடைவதற்கு முன்னர் வடக்கு கிழக்கில் யானைகள் இருந்தனவா இல்லையா என நாம் இங்கு விவாதிக்க முற்படவில்லை. ஏனெனில் அது சிறு பிள்ளைக்கும் தெரிந்த விடயம். அதைப்போய் இங்கு விவாதிப்பது நகைப்புக்கிடமானது.

ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர்கள் சிலரும் ஆலோசகர்களாக இருந்து வெளியிடப்படுவதாகக் கூறப்படும் 'தமிழ் நெற்' இணையத்தளத்தில் இப்படியான 'அம்புலிமாமா' கதைகளை எழுதுவது முழுத் தமிழ் சமுதாயத்துக்கும் வெட்கக்கேடானது. 'எப்படியேனும், எந்த வகையிலேனும், சிங்களவனை அடிச்சால் காணும்' என்ற நினைப்பில் எழுதப்படும் இந்த வகையான கோணங்கித்தனமான எழுத்துக்களால் சிங்கள மக்களோ, ஏன் சிங்கள இனவாதிகளோ கூட பாதிக்கப்படப் போவதில்லை. தமிழ் மக்களுக்கத்தான் மேலும் மேலும் இழப்புகள் ஏற்படும் என்பதை சம்பந்தப்பட்ட ஞானசூனியங்கள் புரிந்து கொண்டால் சரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org